Tamil
Make the Valley Full of Ditches
52-0719

# இந்தப் பள்ளத்தாக்கிலே எங்கும் வாய்க்கால்களை வெட்டுங்கள்

Hammond, Indiana, USA
52-0719

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

"... சத்ததின் நாட்களிலே..." வெளி.10:7

www.messagehub.info

# முன்னுரை

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு மக்களை ஆயத்தபடுத்த ஒரு ஊழியம் எழும்பவேண்டியது அவசியம் என்று வேதத்தில் உரைக்கப்பட்டிருக்கிறது. மல்கியா 4:5,6, லூக்கா 17:30 மற்றும் வெளிப்பாடு 10:7 அது போன்று வேதத்தில் உறைக்கபட்டிருக்கிற அனேக தீர்க்கதரிசன வசனங்களுக்கு வில்லியம் பிரன்ஹாம் அவர்களின் மகத்தான ஊழியமே பரிசுத்த ஆவியின் பிரதியுத்திரமாக இருக்கிறது. இந்த உலகளாவிய ஊழியம் தேவனுடைய ஆவியினாலே கடைசிகாலத்தில் தொர்ந்து நடைபெறும் அவருடைய கிறியைகள்.

நீங்கள் இந்த செய்தியை ஜெபத்துடன் வாசிக்கும்போது இந்த அச்சடிக்கபட்ட வார்த்தையானது உங்களுடைய இருதயத்தில் எழுதபட்டதாய் மாறவேண்டும் என்பதே எங்களுடைய ஜெபம்.

இம்மொழியாக்கம் முழு கவனத்தோடு கச்சிதமாய், எதையும் கூட்டாமலும் குறைக்காமலும், முடிந்த அளவிற்க்கு முயற்சியெடுக்கபட்டிருக்கிறது. இருப்பினும் வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பிரசிங்கித்த ஆங்கில ஒளிநாடாவே அதிகாரப்பூர்வமானது.

வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பிரசங்கித்த 1,100 ஒளிநாடாக்களும் புத்தகங்களும் அனேக மொழிகளில் பதிவிறக்கம் செய்யவும் அச்சடிக்கவும் இலவசமாய் உள்ளது.

இந்த புத்தங்கள் எந்த மாறுதலும் இல்லாமல் இருக்கிறபடியே முழுமையாய் மறு அச்சடித்து இலவசமாய் வினையோகிக்க அனுமதி உண்டு

# இந்தப் பள்ளத்தாக்கிலே எங்கும் வாய்க்கால்களை வெட்டுங்கள்

1 கடந்து செல்லும்போது, சுரமண்டலம் வாசிக்கப்படும் போது, கர்த்தரின் கரம் அவன் மீது வந்தது.

தேவன் தாமே அவருடைய ஆசீர்வாதத்தை அவருடைய வார்த்தையோடு கூட்டுவாராக. உஷ்ணமாயிருப்பது எனக்குத் தெரிகிறது. இங்கு உஷ்ணமாக உள்ளது. இப்போது, உங்களால் எவ்வளவு முடியுமோ அவ்வளவாய் எழுந்து நின்று கொண்டு, சில விநாடிகள் நான் பேசும்போது, உங்களால் இயன்றவரை, உங்களை சௌகரியப்படுத்திக் கொள்ளுங்கள். நான் எனது கடிகாரத்தைக் கவனிக்கிறேன். இன்னும் பத்து, ஐந்து முதல் பத்து நிமிடங்களில் நான் சொல்லும்போது நாம் ஜெப வரிசையை ஆரம்பிக்கலாம். வியாதியஸ்தருக்காய் ஜெபத்தை ஆரம்பிப் போம். அது இப்பொழுது சரியாக ஒன்பது மணியாயிருக்கும்; அது ஒன்பது முப்பது அல்லது ஒன்பதே கால் வரைக்கு முன்னதாக இருக்கலாம்.

இப்போது, இது இஸ்ரவேலின் பின்மாற்றத்தின் வேளையின் போது நடந்தது. அவர்கள் தேவனிடமிருந்து புறம்பே சென்றுவிட்டார்கள். அதன்பிறகு யூதேயாவுக்கு ஒரு அரசன் இருந்தான். இப்போது, இஸ்ரவேலின் ராஜா ஆகாபின் மகனாக இருந்தான். அவன் தன் தந்தைக்குப் பின்பாக வந்தான். யூத ஜனமல்லாத இடத்தில் திருமணம் புரிந்தவன். இன்றைய நாட்களில் நடப்பது போன்று, ஒரு கிறிஸ்தவன், பாவியாகிய ஸ்திரீயை மணப்பது போல அல்லது பாவியான ஒரு ஸ்திரீ ஒரு கிறிஸ்தவனை, அது எதையோ ஆரம்பிக்கிறது. சரியா? பாருங்கள்? நீங்கள் இணையாக விசுவாசிகளோடு பிணைக்கப் பட்டிருந்தாலொழிய திருமணம் செய்து கொள்ளாதீர்கள். (உங்களுக்குத் தெரியுமா?) பிரச்சனைகளைக் குறைக்க பாருங்கள்?

இப்போது, ஆதியிலே தேவன் மனிதனையும், ஸ்திரீயையும் உண்டாக்கினபோது, அவர் அவர்களுடைய ஆவிகளை உண்டாக்கினார். உங்களுக்காக ஒருவர் உள்ளார். சிறிது காத்திருக்கவும். பாருங்கள்? சரி.. இப்போது...

2 ஆனால், அங்கே ஆகாப் சென்று, இந்த இராணியை அல்லது சிறிய இளவரசியை திருமணம் செய்தான். அவள் ஒரு விக்கிரக ஆராதனைக்காரியாக அவன் உடன்படிக்கைக்குப் புறம்பாகத் திருமணம் செய்தான். அவன் அப்படிச் செய்தபோது, இஸ்ரவேலுக்குள் தொந்தரவைக் கொண்டு வந்தான். அவள் அதைக் கிழித்துப் போட்டாள். பையனே, அவள் ஒரு முன்கோபியாக இருந்தாள்... என்னே அப்படி யாராவது இருந்தார்களா?.... அவள் ஒரு அழகான பெண்ணாக இருந்திருக்கலாம்... எனக்குத் தெரிந்த அளவுக்கு ...அவள் ஒரு அழகான ஸ்திரீயாக இருந்தாள்.

இப்போது, இதை இங்குள்ள ஸ்திரீகளுக்கு அல்லது மற்றவருக்கு

மறைத்து வைத்துப் பேச நான் விரும்பவில்லை. ஆனால் நான் ஒரு விஷயத்தை உங்களிடம் கேட்கப் போகிறேன். இப்போது, நீங்கள் என்ன செய்கிறீர்கள்? அது உங்களுக்கும் நம்முடைய கர்த்தருக்கும் இடையே உள்ளது... அது சரியா? அது உங்களுடைய சொந்த விஷயம். ஆனால் நான் நினைக்கிறேன்... நீங்கள் கவனித்தீர்களா? முதல் மனுஷி தன்னுடைய முகத்திற்கு எந்தவித அழகு சாதனங்களையும் பயன்படுத்தவில்லை என்பதை எப்போவதாவது கவனித்தீர்களா? அவளுக்கு என்ன நேர்ந்தது? அவள் யேசபேல். தேவன் அவளுக்கு என்ன செய்தார் தெரியுமா? நாய்களுக்கு அவளை இரையாக்கினார். எனவே, நீங்கள் பாருங்கள், அது நாய்க்கறி. எனவே. சரி. ஆகவே

3 இப்போது, அவள் தனது தலையை சீராக்கி, தனது முகத்திற்கு வர்ணம் பூசி யெகூவை சந்திக்க வெளியே போனாள். எலிசாவின் தீர்க்கதரிசனத்தை முழுமையாக்கும் விதத்தில், அவன் அவளை ஜன்னலிலிருந்து வெளியே வீசியெறிந்தான். தேவன் நாய்களுக்கு அவளை உணவாக்கினார். அவளது உள்ளங்கையும், மண்டை ஓட்டின் ஒரு பகுதியும் மாத்திரம் விடப்பட்டிருந்தது. அவன், “எப்படியாயினும், அவளுக்கு ஒரு அடக்கத்தைப் பண்ணுங்கள்,” என்றான்.

நல்லது, பிறகு ஆகாபுக்குப் பின்பாக வந்த அவளுடைய மகன் யெரோம் சண்டை வந்தபோது, அவர்களுக்குள் ஒரு ஒப்பந்தத்தை உண்டு பண்ணினர். அவர்கள் யூதாவின் அரசனைக் கூப்பிட்டார்கள். அவனுடைய பெயர் யோசபாத் - அவன் நீதியுள்ள ஒரு மனிதனும், அற்புதமான தேவனுடைய மனிதனுமாக இருந்தான்.

எனவே அவர்கள் கூடி வந்தபோது ஒரு உடன்படிக்கை செய்தனர். இப்போது மீண்டும், ஒரு விசுவாசி, ஒரு அவிசுவாசியோடு பிணைத்துக் கொள்ளுதல். இதை நான் கடந்து போகட்டும். தயவு செய்து, நான் எனது வார்த்தையைக் கடந்து போக விரும்பவில்லை .....

4 இங்கே, அதிக தொலைவில் இல்லை. இப்போது நான் ஒரு அரசியல்வாதியல்ல, விஷமியுமல்ல, சுவிசேஷக ஊழியனாக நான் உள்ளேன். ஆனால், இங்கே அதிக தூரத்தில் இல்லை, எல்லாவற் றையும் நீங்கள் சிவப்பு ரஷ்யாவாக பார்க்கிறீர்கள். நாங்கள் சிவப்பு ரஷ்யாவைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். ஜெர்மனும், இரண்டாம் உலகப்போரும் வெடிப்பதற்கு முன்பு வரை நாம் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது தேவனை நம்பாத அந்த தேவ பக்தியற்ற கம்யூனிஸ்ட் ஜனங்களோடு, நாம் பிணைக்கப்பட்டிருந்தோம். சிலுவைக்குப் பதிலாக நாம். நாம் சிலுவையை புறக்கணித்தோம். இப்போது நாம் இரட்டத்தனை யான சிலுவையைப் பெற்றுக் கொண்டோம் பாருங்கள். அதுசரி. அதைத்தான் நாம் பெற்றுக் கொண்டோம்.

ஜெபக்கூட்டங்கள் நீண்ட நேரம் இருக்குமானால், அதைப்பற்றி சிறிது நேரமே நான் பேசுவேன் என உங்களுக்குத் தெரியும். அது குறித்து அந்த வரிசையிலே ஆனால் இப்போது, நாம் இங்கு இருந்து, வரிசையில் இருந்து பிணைக்கப் பட்டுள்ளோம். “இரண்டுபேர் ஒருமித்து

மேலும் கர்த்தாவே, உம்முடைய தீர்க்கதரிசியாக ஜீவனுக்கும் மரணத்துக்கும் இடையில் நின்று கொண்டும், பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகம் பண்ணப்பட்டும் இருக்கிற நான் இங்கு இருக்கக்கூடிய, சந்தேகத்திற்குரிய எந்த ஆவியையும் சவாலிடும்படியாக அப்படியாக, தேவனுடைய பிள்ளைகள் சுகம் பெற்றுக் கொள்ளத்தக்கதாக முன்னேறிச் செல்கிறேன்.

37 இப்போது சாத்தானே, இங்கு தேவனுடைய வார்த்தைக்கு எதிராக கேள்விக்குறியோடு சுற்றிலும் தொங்கிக் கொண்டிருக்கிற நீ இன்றிரவு வெளியாக்கப்படப் போகிறாய். நீ வெளியாக்கப்படப் போகிறாய். 'நீ யார்? நீ என்ன?' என்பதையும் 'நீ ஒரு பொய்யன் என்பதையும் பொய்க்குப் பிதாவுமாய் இருக்கிறாய் என்பதையும் இப்போது தேவன் உன்னைக் குறித்து வெளிப்படுத்தியுள்ளார். மேலும் தேவனுடைய சபையாகவும், சபையின் ஒரு அங்கத்தினனாகவும் பரிசுத்த ஆவியினால் மறுபடியும் பிறந்தவனாகவும் இந்த உலகில் ஒரு தீர்க்கதரிசியாக அழைக்கப்படவும் இந்த ஜனங்கள் இயேசுகிறிஸ்துவை தங்களுடைய சுகமளிப்பவராக அறிக்கை செய்துள்ளார்கள். மேலும் ஜீவனுக்கும், மரணத்திற்கும் இடையே நின்று கொண்டிருக்கும் ஆசாரியனாக, நான் “இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உன்னுடைய சக்தியை உடைக்கிறேன்” என்று சொல்கிறேன். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இந்த கட்டிடத்தை விட்டு வெளியேறுவாயாக. அவர்கள் ஒவ்வொருவரையும் கட்ட விழ்த்து விடு. அவர்களை விட்டு வெளியே வா, சாத்தானே! அவர்களை விட்டுவிடு.

இப்போது கட்டிலில் இருப்போரும் நோயாளிகளின் பலகையில் இருப்போரும், நாற்காலியில் இருப்போரும் வியாதியாயுள்ளவர்களும், முடமானவர்களும் எழுந்து நில்லுங்கள். அதோ, அங்கே அவர்கள் நடந்து வருகிறார்கள். நொண்டியும், முடமும் ஆனவர்களே போய் சுகமடைவீர்களா. எழுந்து நிற்கவும்.



இருந்தாலொழிய, எப்படி ஒன்றாகக் கூடி நடப்பார்கள்?” நீங்கள் அங்கே உள்ளீர்கள். நீங்கள் எப்படி அதைச் செய்வீர்கள்? உங்களால் முடியாது. பெந்தெகோஸ்தின் நாளின் போது, பரிசுத்த ஆவியை எது வரவழைத்தது? அவர்கள் ஒரே மனமாயிருந்தார்கள். அதுதான் பரிசுத்த ஆவியை வரவழைத்தது. மேலும், நாமும் இப்போது, அவ்வாறே இருக்க வேண்டும். அதன்பிறகே பரிசுத்த ஆவியானவர் நம்மீது வருவார்.

5 நல்லது இப்போது, இந்த இராஜாக்கள் அவர்களுக்குள் ஒரு உடன்படிக்கையை செய்து கொண்டு அசீரியருடன் போர் புரியச் சென்றனர். அவ்வாறு அவர்கள் தங்கள் வழியிலே துரிதமாகச் சென்றபோது, கர்த்தரிடம் ஆலோசனை பெறாமல், புறப்பட்டுப் போனார்கள். பாருங்கள். நீங்களும் அவிசுவாசிகளோடு கலந்து கொள்ளும்போது, அவ்வாறுதான் செய்கிறீர்கள். நீங்கள் சுகமாகுதலை உரிமை கோரி இங்கு வந்து பின்னர் வெளியே செல்லுகிறீர்கள். சிலர், “ஆஹா.. இது மூடத்தனம், இது அதோடு ஒன்றுமில்லை, அதை நம்பாதேயுங்கள்; அது மனோதத்துவ சாஸ்திரம், நீங்கள் மூடத்தனமாக செயல்படுகிறீர்கள்”, என்று கூறுவர். வெளியே பாருங்கள். அங்கேதானே நீங்கள் எதிர்பாராத மிகப்பெரிய ஆபத்து உள்ளது. உடனே அத்தகைய நபரிடமிருந்து உங்களை வேறுபிரித்துக் கொள்ளுங்கள், அவர்களோடு நீங்கள் எதுவும் செய்வதற்கில்லை . “நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?” என்பதைத் தவிர வேறு எதுவுமே இல்லை. கர்த்தரிடம் வழிநடத்தப்படுவதை அவர்கள் விரும்பினால், நீங்கள் அதைச் செய்யுங்கள். ஆனால் அவிசுவாசத்தினின்று உங்களை தூரப் படுத்துங்கள். பாருங்கள்? நீங்கள் அதைச் செய்ய முடியாது, ஏனெனில், ஒவ்வொரு நபரும்.

நீங்கள் ஒரு சபைக்குச் செல்கிறீர்கள்... இதை நான் ஊழியம் செய்பவர்களுக்கு ஒரு சவாலாக விடுகிறேன். நீங்கள் ஒரு சபைக்குச் சென்று, அந்த ஊழியக்காரன் நடக்கும் விதத்தைப் பாருங்கள், அந்த சபையினரும் அவ்வாறே நடந்து கொள்வார்கள். அது மிகவும் சரியாய் உள்ளது. பாருங்கள். நீங்கள் அதைக் கவனியுங்கள். அச்சபைக்குச் சென்று அந்த போதகர் உபதேசிப்பதையும் அவர் செய்வதையும் கவனியுங்கள். அது அந்த ஆவி, ஒரே மாதிரியான ஆவி. எனவே நாம் விசுவாசிகளோடு தரித்திருப்போம். நாம் எதைச் சார்ந்தவர்களோ அங்கேயே தரித்திருப்போம். சாத்தானின் இடத்தை எடுத்துக் கொள்ள வேண்டாம்.

6 நீங்கள் நினைவு கொள்ளுங்கள். உறைபனியின் மீது வழுக்கிச் செல்லும் தகடுகளை எத்தனை பேருக்கு நினை விருக்கிறது? பாருங்கள்? நீங்கள் அந்தத் தகடுகளை சுற்றிக் கொண்டே நகர்த்தி, கீழே வரும்போது எவ்வளவு அருகில் உங்களால் வரமுடியும் என்று.. பாருங்கள். ஒரே முறையில் எல்லாம் முடிந்தது. பாவம் செய்யாமலே பாவத்தின் அருகில் எப்படி வரமுடியும் என்பது அல்ல, அதிலிருந்து எவ்வளவு தூரம் நீங்கள் விலகியிருக்கிறீர்கள் என்பதே காரியம்.

ஒரு வயதான ஸ்காட்லாந்தைச் சார்ந்த மனிதன் கூறினார்...

ஒருமுறை அங்கே ஒரு மலையின் உயரே ஏற வேண்டியிருந்த போது, அங்கே சில வாகன ஓட்டிகள், "நான் அந்த மலையின் உயரே ஆறு குதிரைகளின் தலைகள் மற்றும் பயிற்சியாளருடன், ஆறு அங்குலம், மலை விளிம்பில் ஓட்டவும், மலையைச் சுற்றி முழு வேகத்தோடு போகவும் முடியும், நான் மலையேறும் குழுவைச் சேர்ந்தவன்", என்று கூறினார் என்று சொன்னார்.

ஸ்காட்லாந்தைச் சேர்ந்தவர் தலையைப் பிய்த்துக் கொண்டு கூறினார், "நான்..."

இன்னொருவர் கூறினார், "நான் அதின் மேல் ஏறி. நான்கு அங்குலம் விளிம்பில் ஓட்டி, என்னுடைய குழுவோடு மலையைச் சுற்றி வருவேன், ஒருபோதும் கீழே விழமாட்டேன்",

"நான் உங்களை கூட்டிச் செல்கிறேன்", என்றான். அவர்கள்..."உங்களைக் குறித்து என்ன?" என மூன்றாவது மனிதனிடத்தில் வினவினார்கள்.

அவர்கள் சொன்னார், "ஐயா, நான் ஒரு சிறந்த மலையேறும் குழுவைச் சார்ந்தவன். ஆனால் என்னால் எவ்வளவு தூரம் முடியுமோ அந்த அளவு உயரே போகிறேன்".

அவர் சொன்னார், "நீங்கள் மட்டும்தான் என்னைக் கூட்டிச் செல்ல வேண்டும்", பாருங்கள்? நீங்கள் எப்படி அருகில் செல்லக்கூடும். எவ்வளவு தூரம் அதைச் சுற்றி விளையாட முடியும் என்பதல்ல, எவ்வளவு தூரம் அதிலிருந்து விலகி இருக்க முடியும் என்பதே சரி. அது அடுத்தபடியான ஒன்று. அதிலிருந்து விலகியிருத்தல். அவிசுவாசத்தோடு பிணைக்கப்படாதிருங்கள்.

7 இப்போது, இந்தக் கூட்டம் எப்போது முடியுமோ, அப்போது நீங்கள் வெளியே எங்காவது செல்வீர்கள். யாராவது சொல்வார்கள், "நல்லது, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், அதை சரியாக அடையாளம் கண்டு கொண்டேன். பாருங்கள். இப்போது, அது மனதை அறிதல். அது என்னவென்றால், இது, அது அல்லது மற்றது".

பிசாசானவன் உங்களிடமிருந்து தேவன் கொடுத்த எல்லாவற்றையும் திருடி எடுத்துக்கொள்வான். உங்கள் இருதயத்தில் அது வந்தவுடன், நீங்கள் என்ன செய்வீர்கள்? நீங்கள் தொடர்ந்து, "தேவனே எனக்கு இன்னும் தாரும், இன்னும் தாரும்" என்று கேட்டுக் கொண்டேயிருங்கள். மேலும், "நீதியின் மேல் பசி தாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்' பாருங்கள். நீங்கள் அதற்குப் பசியாயிருந்தால், பசியாயிருக்க ஆசீர்வதிக்கப் பட்டவர்கள். பாருங்கள்? இது ஒரு ஆசீர்வாதம். ஏனெனில், உங்களில் தேவன் நீதியின் மேல் பசியாயிருக்க, போதுமான வராய் இருக்கிறார்.

8 இப்போது கூர்ந்து கவனியுங்கள், முதலாவது காரியம், நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது, அவர்கள் இரக்ககத்தை நாடவில்லை



செய்தியை எனக்குள்ளாக ஏற்றுக் கொண்டிருக் கிறேன். இந்த இரவு முதல் நான் உம்மை விசுவாசிக்கிறேன். இப்பொழுது, நீர் என்னை சுகமாக்கி உள்ளீர் என்று விசுவாசிக்கப் போகிறேன். கல்வாரியில் முடிந்துபோன உம்முடைய செயலில் என்னுடைய சுகமளித்தலை நான் ஏற்றுக்கொள்கிறேன். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் நான் அதைப் பெற்றுக் கொள்கிறேன்.

35 இப்போது பயபக்தியோடு இருங்கள். இது உங்கள் - உங்கள் வாயில் உள்ளது. உங்களுடைய அறிக்கை உங்கள் வாயில் உள்ளது. ஒரு நிமிடம் இந்தப் பக்கமாக நில்லுங்கள். இப்போது நான் உங்களுக்காக ஜெபிக்கட்டும். தேவன் இந்த மேடையில் எனக்குப் பிசாசை நொறுக்க வல்லமை கொடுத்தால், நரம்புக் கோளாறு உள்ளவர்கள், போதை நண்பர்கள், போதைக்கு அடிமைப்பட்டவர் முதலானவர்களை விடுதலை செய்யவும் முடியும்.

மேலும் புற்றுநோய் கூட போய்விடும். எது உண்மையோ, நிச்சயமாக நான் அதையே பேசுகிறேன். நீங்கள் இயேசுவை உங்களுடைய சுகமாக்குபவர் என்று அறிக்கை செய்துள்ளீர்கள்? நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடு இப்போது விசுவாசிக்கிறீர்கள். மேலும் எனக்கு இருக்கும் எல்லா பெலத்தோடும் நான் முன்னதாக சென்று, உங்களுக்கு மேலே இருக்கக் கூடிய இந்த இருளைக் கடிந்து கொண்டு அதற்குச் சவாலிடுகிறேன்.

36 ஓ, தேவனே, என் பிதாவே, என்னுடைய தாயின் கருவிலிருந்து என்னைப் பிரித்தெடுத்து, இந்த நோக்கத்துக்காக என்னை அழைத்து, இதற்காக அபிஷேகித்து, இந்தச் செய்தியை ஜனங்களுக்கு நான் கொண்டு வருவதற்காக. உலகதோற்றத்துக்கு முன்பாகவே அவர்கள் உம்மை நீரே உண்மையான ஒரே தேவன் என்றும் இயேசுகிறிஸ்து உம்முடைய குமாரன் என்றும் அறிந்து கொள்ளும்படியாய் என்னுடைய தாயின் கருவிலிருந்து என்னைப் பிரித்தெடுத்த வராயிருக்கிறீர். கர்த்தாவே, இன்றிரவு இங்கு நான் நிற்கும்போது, ஏறக்குறைய பதினெட்டு இரவுகள் தொடர்ச்சியாக பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்பட்டு வருகிறேன். ஓ, ஆவியின் பிதாவே, என்னுடைய ஜெபத்தைக் கேளும். நான் உம்மை நோக்கிக் கூப்பிடும் போது, எனது ஜெபத்திற்கு செவிகொடும். என்னுடைய மாமிச சரீரம் பலவீனமடைந்து என்னுடைய சக்தியெல்லாம் என்னிலிருந்து வழுவிப்போகிறது. இங்கு நூற்றுக்கணக்காய் இருக்கிறவர்கள் சுகம் தேவைப்படுகிறவர்களாய் இருக்கிறார்கள். நீர் இயேசு கிறிஸ்துவை எங்களுடைய பாவங்களுக்காக நொறுக்கப்படவும், மரிக்கவும், அவருடைய தழும்புகளால் நாங்கள் குணமாகவும், அனுப்பினீர் என்று எனக்கு தெரியும். ஓ, கர்த்தாவே நான் அதை நம்புகிறேன். இந்த ஜனங்கள் தொலைவில் உள்ள பனி மூட்டத்திற்கும், அந்த மேகத்திற்கப்பால், நட்சத்திரங்களுக்கு அப்பால், அவர்களுடைய ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டு தேவனுடைய சிங்காசனத்தைச் சுற்றிலும் அடையும்படிக்கு முன்னேறிச் செல்வதாக நான் விசுவாசிக்கிறேன்.

சுகமாகிவிட்டீர்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.? இருந்து விளைந்தது..?. சுகமாக்கப்பட்டுள்ளீர்கள். சர்வவல்ல தேவன் ?... இந்த மனிதனை சுகமாக்கும்படி உங்களிடம் கேட்கிறேன். ஓ, தேவனே, எல்லாப் பாவங்களையும் நீக்கிப்போடும்.. அவரை...நான் ஜெபிக்கிறேன். உம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் நான் ஜெபிக்கிறேன். நீர் அவரை ஆசீர்வதித்து சுகமாக்கும், ஆமென். நீங்கள் வரவேற்கப்படுகிறீர்கள் ஐயா. நீங்கள் இப்போது நீங்கள் உங்கள் வழியில் சென்று இனி பாவம் செய்யாதீர்கள். நல்லவராக இருங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

34 தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசியுங்கள், தேவன் உங்களை சுகமாக்குவார். அதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அங்கு அமர்ந்திருக்கும் நீரழிவு நோயுடன் அமர்ந்திருக்கும் அந்த ஸ்தீரி அவள் விரும்பினால் சுகமாக்கப்பட்ட முடியும். தேவனிடத்தில் விசுவாசத்தை மட்டும் வைக்க வேண்டும்.

எல்லாமே திடீரென்று இருட்டாகிறது. இப்போது ஒரு நிமிடம், ஒரு நிமிடம் மட்டும் உங்களை இனிமேல் ஒருபோதும் பார்க்க முடியாதது போல இருக்கிறது சகோதரியே. அங்கு எல்லாம் மங்கலாகத்தான் இருக்கிறது. நீங்கள் விசுவாசிக் கிறீர்களா? எல்லோருமே? இங்கு கட்டில்களின் மீது இருக்கும் இந்த ஜனங்களைப் பற்றி என்ன? நீங்கள் படுத்துக்கிடப்பதே உங்களுக்கு சோர்வாக இல்லையா? நிச்சயம் நீங்கள் அப்படித்தான் இருக்கிறீர்கள். பொது ஜனங்களே, நான்-நான் இன்னும் சிறிது நீடித்திருக்க விரும்புகிறேன், ஆனால் இது மூன்று வாரங்கள் தொடர்ந்து நடக்கும் கூட்டமாயிருக்கிறது. மேலும் நான் - நான் கீழே செல்ல வேண்டியிருக்கிறது. நான் - நான் ஓய்வுக்காக சில நிமிடங்கள் அந்தப் பக்கம் போகவேண்டியுள்ளது. எல்லா இடத்திலிருப்போரும், நம் தலைகளைத் தாழ்த்து வோமாக.

நீங்கள் ஒவ்வொருவரும் எனக்குப் பின்பாக இந்த ஜெபத்தை திரும்பச் சொல்லுங்கள். எனக்கு, நம்முடைய கர்த்தரை நான் அறிந்திருக்கிறேன் என்பதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? சாத்தானைத் தோற்கடிக்கும் வார்த்தைகள் எனக்குத் தெரியும். நான் இதைச் சொல்கிறேன். நீங்கள் திரும்பச் சொல்லுங்கள். (சபையானது ஒவ்வொரு வார்த்தைகளையும் திரும்பச் சொல்கிறார்கள் - ஆசி) சர்வ வல்லமையுள்ள தேவனே, வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவரே, நித்திய

நித்திய ஜீவனின் ஆக்கியோனே, எல்லா நல்ல வரங்களையும் அளிப்பவரே, உம்முடைய இரக்கங்களை இன்றிரவு என்மீது அனுப்பும். பிதாவாகிய தேவனே, சர்வ வல்லவரே, அவரது குமாரனாகிய இயேசுகிறிஸ்துவே, பரிசுத்த ஆவியானவரே நான் உண்மையாக விசுவாசிக்கிறேன். இந்த சபையில், இந்த சபையில் தேவன் சில தீர்க்கதரிசிகள், போதகர்கள், சுவிசேஷகர்கள் முதலானோரை வைத்துள்ளார் என நான் விசுவாசிக்கிறேன். சர்வ வல்லமையுள்ள தேவனே, இப்பொழுது நான் நான் அந்த சபையின் பிரசன்னத்தில் இருப்பதாக விசுவாசிக்கிறேன். மேலும் நான், தெய்வீக சுகமளித்தலின்



என்பதை கண்டறிந்தார்கள். தேவனிடத்தில் கேட்காமல் அவர்கள் வெளியே சென்று, தொந்தரவுக்காளானார்கள். நீங்களும் தேவனிடத்தில் கேட்காமல் சென்று எதையாவது செய்தால் எப்பொழுதுமே தொந்தரவுக்காளாகி விடுவீர்கள். அது உண்மை . மேலும் அவர்கள் கூறினார்கள், அவர்கள் கூறினார்கள், “ஏன் அவர்கள். தேவன் எங்களை மரிப்பதற்காகவா இங்கே வெளியே கொண்டு வந்தார்?” என்றார்கள்.

அவர்களில் ஒரு நீதியான மனிதன் இருந்தான். அவன் யோசபாத் எனவே அவன், “எங்காவது கர்த்தருடைய ஒரு தீர்க்கதரிசி இங்கே இல்லையா? நாம் ஆலோசனை பெறுவதற்கு?” எனக் கேட்டான்.

ஒருவன், “நல்லது எனக்குத் தெரிந்த ஒரு சிறு குடிசை சில மைல்களுக்கு அப்பால், அங்கே எங்கேயோ இருக்கிறது”, “அது எலியாவுடையது, அவர் எலிசாவின் கைகளின் மேல் தண்ணீரை ஊற்றி சால்வையை அவன் மீது போட்டார். அவர் ஒரு தீர்க்கதரிசி நாம் அவரிடம் சென்று கேட்கலாம்” என்றான்.

அவன் முற்றத்துக்கு முன்பாக நின்றபோது, வயதான எலிசா நடந்து வெளியே வந்தான். அங்கே யோராம், யேசபேலின் பையன், ஆகாபின் மகன் அங்கிருந்தான். மேலும் அவன் கூறினான்.

அவர்கள், “கர்த்தர் எங்களை இங்கே கொண்டுவந்துள்ளார். நாங்கள் பட்டினியால் சாகிறோம், எங்களது கால்நடைகள் கூட தண்ணீர் இல்லாமல் இறக்கின்றன” எனச் சொல்லத் தொடங்கினர்.

அவர், “நல்லது. நீங்கள் ஏன் உங்கள் தாயாருடைய கடவுளிடம் போகக்கூடாது? நீங்கள் ஏன் உங்கள் தகப்பனாருடைய கடவுள்களிடம் போகக்கூடாது? நீங்கள் ஏன் என்னிடம் வந்தீர்கள்?” என்றார். பாருங்கள்? ஓ அவன் அவன், “நீங்கள் ஏன் அவர்களிடம் செல்லக்கூடாது?” என்று கேட்டான்... அதன்பிறகு, எல்லாம் சமாளித்த பிறகு, அது அவ்வாறே இருக்கும் போது, பிறகு அவன் சொன்னான், “இங்கே யோசபாத் இருப்பதனால் மாத்திரமுள்ள மரியாதையினால் அன்றி, உங்களை நான் ஏறிட்டும் பாத்திருக்க மாட்டேன்” பாருங்கள்? இப்போது அவன், “நான் இந்த புகழ்வாய்ந்த விசுவாசிக்கு மரியாதை தருகிறேன். இங்கே உங்களுக்குள் ஒரு மனிதன் இருக்கிறான். மேலும் ஆகாபே, உனக்கு அதைச் செய்யவேண்டும் என்று அவசியமில்லை, அவிசுவாசிகளுடன் நீ உன்னை இணைத்துக் கொண்டுள்ளாய். ஆனால் உன் நிமித்தமாக நான் ஜெபிக்கப்போகிறேன்” என்றான். அவன், “இங்கு ஒரு பாடற்குழுவை அழைத்து வா” என்றான்.

9 உங்ளுக்குத் தெரியுமா? யாரோ ஒருவர் கொஞ்சநாட்களுக்கு முன்பு என்னிடம், “சகோதரன். பிரன்ஹாமே, சபையில் இசைப்பது தவறு” என்று சொன்னார்கள்.

நான், “அப்படியா?” தேவன் இயற்கையில் மாறுபவர் என்று நீர் நினைக்கிறீரா?“ என்றேன். ”இல்லை “.

நான், “அப்படியானால் தீர்க்கதரிசி எல்லாவற்றையும் சரி செய்தபிறகு அவர், ”பாடகரை அழைத்து வா“ என்ற போது, அப்பாடகர் இசையை இசைக்கத் தொடங்கியபொழுதே, கர்த்தரின் கரம் அந்தத் தீர்க்கதரிசியின் மேல் வந்தது. மேலும் இசையானது, தேவனுடைய வல்லமையைக் கொண்டு வரும் என்றால், இப்போதும், அது தேவனுடைய வல்லமையைக் கொண்டு வரும்” என்றேன். அது மிகவும் சரியே. தேவன் இன்னும் அதே தேவன் தான் என்றேன். பாரும்? அந்தத் தீர்க்கதரிசி... இப்போது நீங்கள் தீர்க்கதரிசியாக இல்லாமல் இருக்கலாம், ஆனால் பாடக்கூடியவராக இருக்கலாம் அல்லது அதில் ஒரு பங்கு வகிக்கலாம் எப்படியோ, தேவனுடைய வல்லமையைக் கொண்டு வருவதற்கு நீங்கள்..... மேலும்...

10 அவர்கள் ஜெபிக்க ஆரம்பித்தனர். எலிசா ஆவிக்குள்ளாகி, ஒரு தரிசனத்தைக் கண்டான். இப்போது அவன், தரிசனத்தை அவன் பார்த்தபோது, அவன், “பாலைவனத்தில் தூரமாய்ப் போங்கள், சரியாக நீங்கள் எங்கே இருப்பீர்களோ அங்கே வாய்க்கால்களைத் தோண்டுங்கள், அவைகளைத் தோண்டி எடுங்கள், அது ”கர்த்தர் உரைக்கிறதாவது“ நீங்கள் காற்றின் சத்தத்தைக் கேட்பதில்லை, மழையும் இல்லாதிருக்கும், ஆனால் தண்ணீர் இருக்கும். அது வனாந்திர வழியிலிருந்து வரும்” ஏன்? அந்தத் தண்ணீர் எங்கிருந்து வந்தது? அந்தக் கன்மலையிலிருந்து, அந்த அடிக்கப்பட்ட கன்மலையின் வனாந்தரத்திலிருந்து அது வந்தது. அது சரி. அது எங்கேயோ ஒரு பின்பாகத்தில் இருந்தது. அது மூடப்பட்டு இருந்திருக்கலாம். ஆனால் அது அடிக்கப்பட்ட கன்மலை. மோசே அடித்தது, வனாந்திரத்தினூடாக வந்தது. அந்த அடிக்கப்பட்ட கன்மலை இன்றும் அங்கே இருக்கிறது. ஜீவத்தண்ணீராகிய அது இன்றைய இரவிலே தொடும்படியாக உள்ளது.

11 மேலும் கவனியுங்கள். இப்போது, தண்ணீர் இருக்கும்படியான எந்த அத்தாட்சியும் இல்லாமலேயே அவர்கள் போனார்கள். முதலாவதாக அவர்கள் செய்ய வேண்டியிருந்தது, என்னவெனில், தண்ணீர் வரும்படியாக வாய்க்கால்களை வெட்டவேண்டும். நான் சொல்ல வருவது உங்களுக்குப் புரிகிறதா? எனது நேரம் முடியப்போகிறது. நான் அவசரமாகச் செல்ல வேண்டும். இந்தக் கருத்தை பெற்றுக்கொள்ளுங்கள். பாருங்கள். மிக ஆழமாகத் தோண்டும்போது நிறைய தண்ணீர் அவர்களுக்குக் கிடைத்தது. ஒவ்வொரு முறையும் அவர்கள் தோண்டும் போது உங்களது மண்வெட்டியின் கீழே ஒட்டிக்கொண்டும், பழைய தகர டப்பாவை அடிக்கும்படியாகவும் காணப்படலாம் அதைத் தூக்கி எறிந்து விடுங்கள், அதனால் சிலர், “அற்புதங்களின் நாட்கள் கடந்து விட்டன” என்று கூறலாம். உதைத்து வெளியே அவனைத் தள்ளுங்கள், மீண்டும் தோண்டுங்கள். அங்கு கீழே அவ்வாறு செய்து, மீண்டும் ஏதாவது தென்பட்டால், அவன், “நல்லது, நான் என்னவென்று சொல்கிறேன், நான் இவைகளை நம்புகிறேன். அவை வெறுமனே ஒரு மன ரீதியான வேலை, மனரீதியான கருத்து அறிவித்தல் அல்லது ஏதோ ஒன்று” எனக் கூறுவான். “அவனை வெளியே தள்ளுங்கள், தோண்டிக் கொண்டேயிருங்கள். அதுதான் சரி. ஆழமாகத் தோண்டத்



பார்வையாளர்கள் என்னை தேவன் அவருடைய தீர்க்கதரிசியாக அனுப்பியுள்ளார் என்பது தெரிந்திருக்க நான் விரும்புகிறேன். நான் உங்களை சங்கை.காக் அவர்களே, நீர் போய் ஜெப அட்டைகளைக்கொடுத்துவிட்டு, அங்கிருந்து ஜெப அட்டைகளை மேலே இங்கு கொண்டு வாருங்கள். நீங்கள் என்னை இவ்விதமாகப் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறேன். நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் முழு இருதயத்தோடும், விசுவாசிக்க வேண்டுமென நான் விரும்புகிறேன். நான் உங்களை ஏதோ கேட்கப்போகிறேன். மேலும் ஒவ்வொருவரும் இப்படிப் பாருங்கள்... மனதார நீங்கள் இயேசு கிறிஸ்துவே, தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கின்றீர்களா?

33 நீர் பாதி படுத்துக்கொண்டிருக்கிறீர். அது பரவாயில்லை ஐயா நீங்கள் வெளியே அங்கே நில்லுங்கள். அதுசரி. உங்கள் தொப்பி அங்கேயே கிடக்கட்டும், உங்கள் கைகளில் போட்டுக் கொள்ளவும். இந்தப் பக்கமாக சிறிது நடங்கள். இந்தப் பக்கம் ஒரு நிமிடம் இங்கே என்னைப் பாருங்கள். என்னை நீங்கள் தேவனுடைய தீர்க்கதரிசி என்று விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் விசுவாசிக்கிறீர்கள். உங்களிடத்தில் எந்தவித தொந்தரவுமில்லை என்று தெரிவதற்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை. உங்களை எனக்குத் தெரியாது. என் ஜீவியத்தில் உங்களை நான் பார்த்த தேயில்லை . ஆனால் நீங்கள் தேவன் மீது பசி, தாகம் உடையவராயிருக்கிறீர்கள். நீங்கள் விசுவாசத்தின்படி கத்தோலிக்கரா, சொல்லுங்கள் நீங்கள் கத்தோலிக்க சபையை சேர்ந்தவரல்லவா? அதுசரியா? உங்கள் கைகளை உயர்த்துங்கள். உங்களை ஜெப மாலையோடு பார்க்கிறேன். மேலும் நீங்கள் வேறுவிதமான ஒரு சபைக்குச் சென்று கொண்டிருந்தீர்கள். அது ஒருவிதமான அது கிறிஸ்தவ விஞ்ஞான சபை என்று நம்புகிறேன், அல்லது ஏதோ ஒருவிதமான படித்தல் அல்லது ஏதோ ஒன்று உங்கள் முன்பாக இருக்கிறது. அவர்கள், நீங்கள் ஏமாற்றி விட்டதாக அல்லது ஏதோ உங்களிடத்தில் தவறு இருப்பதாகக் கூறினார்கள். ஆனால், உங்கள் இருதயத்தில் நீங்கள் கத்தோலிக்க சபையை சேர்ந்தவர். இன்றிரவு இயேசுவை உங்களுடைய சுகமாக்குபவர் என்று ஏற்றுகொள்வீர்களா? அப்படியானால், உங்கள் கரங்களை மேலே உயர்த்துங்கள். நீர் இயேசுவை உங்களை சுகமாக்குபவர் என்று விசுவாசித்தால் உங்கள் கைகளை மேலே உயர்த்துங்கள். மேலும் அவருக்கு நான் பேசுவது கேட்கவில்லை. தரிசனம் என்னை விட்டு பிரிந்துவிட்டது. அதுசரி...சரி. அவரால் இதை, நான் இங்கே எடுத்துக் கொள்ளட்டும். உமக்கு நான் சொன்ன விஷயங்கள் உண்மை என்பது உமக்குத் தெரியும், ஐயா. உங்களுடைய வாழ்க்கை ஒரு மர்மமாகவே உங்களுக்கு இருந்து வந்திருக்கிறது. ஏனெனில், சாத்தான் உங்கள் வாழ்க்கையில் இதைச் செய்ய முயன்றுள்ளான். இப்போது எந்தத் தொந்தரவுமில்லை. தேவன் உங்கள் மீது இரக்கமாக உள்ளார். இப்போது, உங்கள் வாழ்க்கையை எனக்கு வெளிப்படுத்திக் காண்பித்துள்ளார்...

(ஒலிநாடாவில் காலியிடம்-ஆசி) தேவன் உங்களை சரிப்படுத்துவார். நீங்கள் இப்பொழுது அவரை விசுவாசிக்கிறீர்களா? நீங்கள்

செய்யாதே” என்கிறார். நீங்கள் என்னை ஒரு மத வைராக்கியமுள்ளவன் என்று முத்திரை குத்தலாம். நீங்கள் அவரை மத வைராக்கியமுள்ளவர் என முத்திரை போடலாம். அவர் பேசுவதை மட்டும்தான், நான் பேசுகிறேன்.

31 வாருங்கள் ஸ்திரீயே! என்னால் அதிக நேரம் நிற்க முடிவதில்லை . இல்லை . இது மிகவும் கடினமாக உள்ளது. இல்லை. நீங்கள் என்னை தேவனுடைய தீர்க்கதரிசியாக நம்புகிறீர்களா? உங்களுக்காக ஜெபிக்க வேண்டி தேவன் என்னை அனுப்பியுள்ளார் என்று நம்புகிறீர்களா? இவ்வுலகில் உங்களோடு தொடர்பு கொண்டிருக்க எந்தவிதவழியும் இல்லை. உங்களை எனக்குத் தெரியாது. என் ஜீவியத்தில் நான் உங்களை பார்த்ததே இல்லை. நீங்கள் எனக்கு அந்நியமாய் இருக்கிறீர்கள். அதுசரியா? இப்போது நீங்கள் விசுவாசியுங்கள். தேவன், உங்களுக்கு என்ன தவறுள்ளது என்பதை எனக்கு வெளிப்படுத்தினால் பிறகு நீங்கள் இயேசுவை உங்கள் சுகமளிப்பவராக ஏற்றுக் கொள்வீர்களா? நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடு ஏற்று கொள்வீர்களா? சரி. நீங்கள் இதிலிருந்து விடுபெற நினைத்து எல்லாவற்றையும் முயற்சி செய்துள்ளீர்கள். ஆனால் உங்களுக்கு வயிற்றில் தொந்தரவு இருக்கிறது. அது சரியா? மேலும் அது குடல் புண் வியாதி. அது வயிற்றின் குழிக்குள்ளாகவே ஒரு பகுதியில் இருக்கிறது. அது நீங்கள் எதைச் சாப்பிட்டாலும் எரிச்சலையும் தொந்தரவையும் கொடுக்கிறது. மேலும் உங்களுக்கு வயிற்றுப் புண் இருப்பதால், நீங்கள் சாப்பிடும்போது வயிற்று அமிலக் கோளாறு ஏற்படுகிறது. அது சரியா? நிச்சயமாக சரி. சர்வ வல்ல தேவனே, ஜீவியத்தின் ஆசானே, நான் இப்போது இந்த வயிற்றுத் தொந்தரவை சபிக்கிறேன். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில், அது அது அவளை விட்டு வெளியே வந்து அவளை விட்டுப் போகட்டும். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக சகோதரியே. இப்போது நீங்கள் போய் உங்களுக்கு எது வேண்டுமோ அதைச் சாப்பிடுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்.

இப்போது ஸ்திரீயே, அங்கே உட்கார்ந்திருக்கும்போது, ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கும்போது, அந்த பெண்மணி வயிற்றுப் பிரச்சனையிலிருந்து சுகமாக்கப்பட்டுள்ளாள். நீங்கள் அதே பிரச்சனையிலிருந்து சுகமாக்கப்பட்டுள்ளீர்கள். உங்ளுக்கும் கூட வயிற்றுப் பிரச்சனை இருந்தது. அதிலிருந்துதானே நீங்கள் சுகமாக்கப்பட்டுள்ளீர்கள். சரி. நீங்களும் போய் இப்போது உங்களுக்கு விருப்பமானதை சாப்பிடுங்கள். உங்களுக்கு எதைச் செய்ய வேண்டுமென விரும்புகிறீர்களோ, அதைச் செய்யுங்கள்.

32 கீழே அந்த வரிசையில் இருப்போர், உங்கள் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும் நீங்கள் விசுவாசிக்கின்றீர்களா? எத்தனை பேர் அங்கே கீழே உள்ளோர் நம்புகிறீர்கள்? அந்த வரிசையில் இப்போதுள்ளோர் உங்கள் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும் நம்புகிறீர்களா? பாருங்கள். நீங்கள் ஒருபோதும் இந்த ஜெப வரிசையில் இருந்ததில்லை. நீங்கள் அங்கே நின்று கொண்டிருக்கிறீர்கள்.



தோண்ட, அதிக அதிகமான தண்ணீரைப் பெறுவீர்கள்” அது சரியா?

எனவே இத்தருணத்தில் அப்படி அமர்ந்து, “நான் நாளை இரவு குணமடையலாம். நாளை மதியம் ஆராதனையில் குணமடையலாம். அதை அப்படியே அங்கு வைத்து விடுங்கள். பிறகு, ”நான் இப்பொழுதே குணமடையப் போகிறேன். இதுதான் தருணம், நான் இங்கு கால்வாயை வெட்டப்போகிறேன். பரிசுத்த ஆவியானவர் என்மீது பொழியும் போது, என் இருதயம் நிரம்பிய வழியும்; நான் துள்ளிக்குதித்து ஓடத் தொடங்குவேன். மேலும் நான் தேவனைத் துதிக்கப் போகிறேன். நான் குணமடையப்போகிறேன்“ என்று கூறுங்கள் அவ்வளவுதான். ஆழமாகத் தோண்டும்போது அதிகமான தண்ணீர் உங்களுக்குக் கிட்டும்.

12 மேலும் இப்போது, மழை பெய்வதை அவர்கள் கேட்கவில்லை. அவர்கள் மழை பெய்வதைப் பார்க்கவும் கூட இல்லை. அங்கே மேகங்கள் இல்லை, காற்று இல்லை, இடி இல்லை, மின்னல் இல்லை ஆனால் அங்கே தண்ணீர் இருந்தது. ஒ , என்னே! நீங்கள் கவலைப்படவேண்டாம். நீங்கள் வாய்க்கால்களை மாத்திரம் தயார் செய்யுங்கள். தேவன் தண்ணீரை உற்பத்தி செய்வார். வழியிலே இருந்து எல்லா அவிசுவாசத்தையும் எடுத்துப்போடுங்கள். தேவன் மற்ற பிறவற்றை உருவாக்குவார். நீங்கள் நடக்க முடியாது என்று எண்ணினால், உங்கள் கால்களால் எழும்பி, இயேசுவை உங்களுடைய அவருடைய வார்த்தையில் எடுத்துக் காணுங்கள். உங்களால் பார்க்க முடியவில்லை என்று நீங்கள் எண்ணினால், உங்கள் கைகளை உங்கள் கண்களுக்கு மேல் அசைத்து, தேவனிடம் உங்களுக்குப் பார்வை கொடுக்கும் படி கேளுங்கள். என்ன நடக்கிறது என்று கவனியுங்கள், அதை விசுவாசியுங்கள். பல மாதங்களாக நீங்கள் நடக்கவில்லை யென்றால், “நான் நடப்பதற்கு மிகவும் பலவீனமாய் இருக்கிறேன்” என்று சொல்லி என்ன நடக்கிறது எனக்கூறி, உங்கள் கரங்களை உயர்த்தி, “இயேசுகிறிஸ்துவே, நான் தூய்மையான இருதயத்தோடு உம்மிடம் வருகிறேன்” என்று சொல்லுங்கள். அந்த வாய்க்காலைத் தயார் செய்து, என்ன நடக்கிறது என்று கவனியுங்கள், ஆம் ஐயா.

13 பிறகு அடுத்தநாள் காலை, அவர்கள் வந்தபோது, தண்ணீர் வரத்தொடங்கியபோது, காலை பலி செலுத்துதலின் சமயத்தின் போது, எல்லாம் ஒழுங்கில் வைக்கப்பட்டிருந்தபோது, அங்கே தண்ணீர் வந்தது. தண்ணீரானது கீழே கொட்டத் தொடங்கியது. அது வனாந்திரத்திலிருந்து அந்த வழியே வந்தது. முதலாவது காரியம் உங்களுக்குத் தெரியுமா? அவர்களது எதிராளி அதைப் பார்த்தான். அவர்கள் உள்ளே பாய்ந்து வந்தனர். தாக்குவதற்குப் பதுங்கியிருந்தனர். அவர்கள் அவர்களுடைய தேசத்தின் மேலே ஓடினர், இஸ்ரவேலர் அப்படிச் செய்து, அவர்களுக்கிருந்த ஒவ்வொரு மரங்களையும் வெட்டினர். ஒவ்வொரு இடத்தையும் நாசம் செய்தனர்.

மேலும் சகோதரனே, எப்போதாவது சமயம் இருப்பின் எனக்குச் செவி கொடுங்கள். கர்த்தரின் நாமத்தில் நான் பேசுவதால், எப்போதாவது ஒரு சமயத்தில் இருப்பார்களானால் இயேசுவின் சீடர்கள் என்னும் நாமத்தில்

அழைக்கப்படும் கிறிஸ்தவ ஜனங்கள், தேவனுடைய வல்லமையிலும், நீதியிலும் விசுவாசம் கொண்டிருக்கும் சபையானது எப்போதாவது ஒரு சமயம் இருக்குமானால், நீங்கள் வாய்க்கால்களைத் தோண்டி, சாட்சியின் கல் உங்கள் கரங்களில் எப்போதாவது இருக்கும் சமயத்தில், இங்கு சுற்றியிருக்கும் பழைய குளிர்ந்த பாரம்பரியக் கிணறுகளை சரி செய்யும்படி இருந்தால் இதுவே அதை செய்யக் கூடிய தருணம். அதுவே சரி, அதுவே சரி. சரி. நாம் போகலாம், அதுசரி. தேவன் இங்கே, இன்று இரவு தரிசனத்தை அளிப்பார். நீங்கள் அவரை விசுவாசிக்கக் கூடுமானால், அவர் உங்களுக்காக ஏதாவது செய்வார். நீங்கள் அவரை விசுவாசிக்கிறீர்களா? அவரால் எல்லாம் கூடும்; விசுவாசிக்க மட்டும் செய்யுங்கள். நாம், நம் தலைகளைத் தாழ்த்துவோமாக.

14 பரலோகப் பிதாவே, இந்த மணிநேரம் இங்கேயுள்ளது. இக்கட்டிடம் உஷ்ணமாக உள்ளது. ஆனால் இதுதான் தருணம். வேளையானது வந்துவிட்டது. எங்கள் அருமையான கர்த்தாவே, நீர் மேலே நோக்கி, "பிதாவே, இந்த மணிநேரம் வந்துவிட்டது" எனக்கூறினதை நான் நினைவுகூருகிறேன். இந்த மணிநேரம் எதற்காக வந்திருக்கிறது? ஓ, தேவனே, மக்கள் விசுவாசிக்க வேண்டும் என்பதற்காக இந்த மணிநேரம் வந்துள்ளது. இம்மணி நேரம் சபைகளை விழுந்து போவதற்கென்று வந்துள்ளது. மதமானது இரட்சிப்பில்லாமல் உலகத்தில் பரவுவதற்கு இம்மணிநேரம் வந்துள்ளது. தேவபக்தியின் வேஷத்தைத் தரித்துக் கொண்டு அதின் பெலனை மறுதலிப்பதற்காக இம்மணி நேரம் வந்துள்ளது. இம்மணி நேரமானது உம்முடைய சபை உயரே எழும்ப வந்துள்ளது. அவளை குப்பையிலிருந்து எழுப்பவும், அசைக்கவும், அவளிடத்தில் அவள் உணரவும், அவளது ஸ்தானத்தில் அவளை வைக்கவும், அவளை ஜீவிக்கின்ற தேவனின் சபையாகவும், எல்லாவற்றிலும் உரிமை கொண்டிருக்கவும் இந்த மணிநேரம் வந்துள்ளது. மீட்டுக் கொள்ளக்கூடிய ஒவ்வொரு ஆசீர்வாதத்தையும் நீர் அவளுக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறீர். அவைகள் இந்த இரவு அவளுக்குரியதாகின்றன. தேவனே இந்த மணிநேரம் வந்துள்ளது. இப்பொழுது, அங்கீகரியும் கர்த்தாவே.

மேலும் அந்தவேளை இப்போது வியாதியஸ்தருக்காக ஜெபிக்கும்படியாய் வந்துள்ளது. சர்வ வல்லமையுள்ள தேவனே, இந்த இரவு, உம்முடைய தூதனை நீர் அனுப்பும்படியாய் நான் ஜெபிக்கிறேன். மேலும் அவர் இக்கட்டிடத்தினூடாகப் போய் அநேக வியாதியஸ்தரை சுகமாக்கவும், நாளைய தினத்திலே எல்லா விடங்களிலும் சுகமாக்கப்பட்டவர்கள் நிறுத்தப்படவும், சாட்சிகள் எல்லாவிடங்களில் செல்லவும், மக்கள் தேவனுடைய மகிமையை உறுதிப்படுத்தவும் செய்யும். அவர்கள் தேவனுடைய சபை எழும்புவதையும், வரப்போகிற மகத்தான பறக்கக் கூடிய பயணத்தில் தங்கள் சிறகுகளை விரிக்கச் செய்வதையும் தெரிந்து கொள்ளட்டும். தேவனே ஜனங்கள் சொந்த ஆசை மற்றும் நம்பிக்கையிலிருந்து இன்று இரவு விலகிச் செல்லட்டும். தேவனின் திட்டத்தின் ஒரு பரிபூரண புரிந்து கொள்ளுதல் வரும் வரை அப்படியே இன்றிரவு அவர்கள் சுகமாகட்டும். இதை அங்கீகரியும்



30 நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்? எனக்கு முன்பதாக, கண் கண்ணாடிகளுடன் நீங்கள் பிரகாசிக்கின்றீர்கள். அது... அல்லது, இல்லை . அதுசரி. அது ஒரு .. ஒரு.. ஒரு இளம் வயதுடைய ஸ்திரீ அங்கே முதலில் நின்று கொண்டிருக்கிறாள். நான் மேடைப் பகுதியில் ஒருவருமில்லை . இப்போது அது விநோதமாக உள்ளது. ஒரு இளம் சிவப்பு தலைமுடியுடைய ஸ்திரீ. சரியாக, இங்கே நின்று கொண்டிருக்கிறாள். பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர்தாமே எனக்கு அதைக் காண்பிப்பாராக. பால்கனியில் அங்கே அவள் இருக்கிறாள். அந்தப் பெண் தன் கண்களைத் துடைத்துக் கொண்டிருக்கிறாள். அவளது கண்களில் ஏதோ பிரச்சனை இருக்கிறது. அது சரியா, இளம்பெண்ணே ? அப்படி யானால் எழுந்து நில். செந்நிற தலைமுடி கொண்ட பெண், அங்கே நின்று கொண்டிருக்கிறாள். சரி, இளம் பெண்ணே , நீ குருடாய் இருந்தாய். நீ இங்கு நிற்பதைப் பார்த்தேன், அந்த பெண்மணி கண்ணாடி அணிந்திருந்ததைப் பார்த்தேன். உன் கண்களில் ஏதோ கோளாறு இருப்பதைப் பார்த்தேன். இப்போது, நான் அவருடைய தீர்க்கதரிசி என்பதை விசுவாசிக்கிறாயா? இயேசுவை உனக்கு சுகமளிப்பவர் என்று ஏற்றுகொள்கிறாயா? வீடு சென்று, இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் சுகமாயிரு.

நீ , என்னை தேவனுடைய தீர்க்கதரிசியாக விசுவாசிக்கிறாயா? உன்னிடத்தில் ஏதாவது தவறு இருந்தால், தேவன் அதை எனக்கு வெளிப்படுத்துவார். நீ அதை நம்புகிறாயா? உன் முழு இருதயத்தோடு? ஆம் பெண்ணே, நான் என்ன சொல்ல இருக்கிறேன் என்பதை இப்போதே நீ அறிந்திருக்கிறாய். ஏனெனில் நீ அதைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறாய். நீ நினைத்துக் கொண்டிருப்பதால் அல்ல, ஆனால் நீ இங்கு எதிலிருந்தோ விடுதலையாகப் போகிறாய். அது சரிதானே? நீ மிகவும் சங்கோஜமாக இருக்கிறாய். இல்லையா? அது மிகவும் மோசமான ஒரு பழக்கத்திலிருந்து விளைந்தது. அப்பழக்கம் - ஒரு ஸ்திரி செய்யக்கூடாத கீழ்த்தரமான பழக்கங்களில் ஒன்று. புகைபிடித்தல் அது சரியா? அதுசரியா? நீ என்னை அவருடைய தீர்க்கதரிசியாக விசுவாசிக்கிறாயா? நீ அவரை உன்னுடைய இரட்சகராக ஏற்றுகொள். இதிலிருந்து விடுதலையடைவாயாக?, தேவனாகிய பிதாவிடம் இயேசுகிறிஸ்துவின் நாமத்தின் மூலம் நீ இப்போது ஜெபித்தாய். அவர் உன்னுடைய எல்லா பாவத்திலிருந்தும் மன்னிக்கிறார். நீ எல்லா சிகரெட்டுக்களையும் வீசி எறிந்துவிட்டு, மீதியான உனது வாழ்க்கையில் ஒருபோதும் அவைகளை தொடாதிருப்பாயா? வீட்டிற்குப் போ கர்த்தராகிய இயேசு தாமே உன்னை விடுதலையாக்குவாராக. தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக சகோதரியே. வீட்டிற்குப் போ, உனக்குக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இந்த புகைபிடிக்கும் பழக்கத்தை நான் சபிக்கிறேன். இப்போது வீடு திரும்பு. உன்னுடைய மீதியான வாழ் நாட்களில் ஒரு கிறிஸ்தவளாக இரு.

"தேவனுக்கு நன்றி" என்று நாம் சொல்வோமாக. "நீங்கள் விரும்பினால் அதைச் செய்துகொண்டே கிறிஸ்தவனாயிருக்கலாம்" என்று நீங்கள் சொல்லலாம். ஆனால் பரிசுத்த ஆவியானவர் "அதைச்

அவ்விதமாக இருக்க விரும்பவில்லை. மேலும் நீங்கள் இப்போது உணர்ச்சி வசப்பட்டவராகவும் அசைக்கப்பட்டவராகவும், பிடிக்கப்பட்டவர் களாய் இருக்கிறீர்கள், அதுசரியா? இப்போது அவரை உங்கள் இரட்சகராக ஏற்றுகொள்ளுங்கள், சாத்தான் உங்களை விட்டுப் போகும்படி தேவனிடம் நான் கேட்பேனேயாகில், இப்போது தானே நீங்கள் விசுவாசிப்பீர்களா?

29 நான் எதைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தேன் என்றால்... அங்கு யாரோ ஒருவர் சுகமானார். மேலும் நான் அங்கு அவள் அமர்ந்திருப்பதைப் பார்த்து, நம்புகிறேன். ஒரு சிறு குடிகாரன் சுகமாகியுள்ளான். அதிக நாட்களுக்கு முன்பு அல்ல இந்த ஜெபக்கூட்டத்தில் எங்கோ அமர்ந்து இருக்கிறான். நான் சுற்றி திரும்பியதனால் உணர்கிறேன். அது சரியா? அப்படியானால், ஸ்திரீயே எழுந்து நில்லுங்கள் அல்லது அங்கே எங்காவது... அதுசரி... சரியாக. நீங்கள் அந்த மனிதனுக்காக அங்கே ஜெபித்துக் கொண்டிருக்கிறீர்கள் அதுசரி, இல்லையா? ஸ்திரீயே? உனது மனதிலுள்ளதை நான் அறியவில்லை. ஆனால் அங்கிருப்பதைக் காண்கிறேன். இந்த மேடையில், அதே விஷயத்திலிருந்து நீ சுகமாக்கப்படவில்லையா? உங்களுடைய ஆவிகள் ஒரே வரிசையில் ஒன்றாக சேர்ந்திருக்க நேரிட்டுள்ளது. நீங்கள் வேறு யாருக்கோ ஜெபம் செய்கிறீர்கள். அது உன்னுடைய தகப்பன்தானே? உன்னருகில் உட்கார்ந்திருக்கிறார்? அதுசரியா? அது சரியா? அவருக்குக் கேட்பது மிகவும் கடினம் அல்லவா? அப்படித்தானே? உன்னுடைய கைகளை அவர் மீது வைக்கவும். நீங்கள் இயேசுவை உங்களுடைய இரட்சகராக ஏற்றுக்கொள்ளுங்கள். தகப்பனே? சரி. நீங்கள் இருவரும், கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் வீட்டிற்குச் செல்லுங்கள். என் சகோதரனே, வீட்டுக்கு போகவும். அது என்னுடைய தகப்பனைக் கல்லறைக்கு அனுப்பிவிட்டது சகோதரனே, இன்றிரவு வீட்டிற்குச் சென்று, இன்னொரு துளிகூட ஒருபோதும் குடிக்காதீர்கள். நீங்கள் சரியாகி விடுவீர்கள். நாம் "வானங்களையும் பூமியையும் உண்டாக்கின சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு துதிகள் உண்டாக்கட்டும்" என்று சொல்வோமாக.

ஐயா, ஒரு நல்ல, முழு சுவிசேஷ ஐக்கியத்தில் இப்போது நீங்கள் சேர்ந்து கொள்ளுங்கள். மீதியிருக்கும் உங்களுடைய நாட்களை கிறிஸ்துவுக்காய் வாழுங்கள். தேவன் உங்களைப் பயன்படுத்துவார். உங்களை மட்டுமல்ல, அவர் உங்களைப் போன்ற மற்றவர்களையும் வெளியே அழைத்து, இந்த அருமையான வெளிச்சத்தில் ஒரு நாளிலே நடக்கச் செய்து மறுகரையிலே என்னையும் சந்தித்து, நாம் ஒருவரோடு ஒருவர் மறுகரையில் கைகளைக் குலுக்கச் செய்வார். நீங்கள் நினைவு கூருங்கள். இன்றிரவு மேடையின் மீது உங்களை அழைக்கப்போகிறேன். அங்கேதானே உங்களது குடிப்பழக்கத்திலிருந்து தேவன் உங்களை விடுவித்து, அவரை நீர் உம்முடைய இரட்சகராக ஏற்று கொண்டீர். ஓ, என்னுடைய ஜனங்களே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை நீங்கள் ஏன் விசுவாசிக்கக் கூடாது? பயபக்தி யுடன் இருங்கள்.



பிதாவே. உம்முடைய ஊழியனின் ஜெபத்தைக் கேளும். நான் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ஆமென்.

15 சரி தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. இப்போது ஆர்கன் வாசிப்பவர் (ஒலிநாடாவில் காலியிடம் - ஆசி)...? கேட்கிறதா?

நான் ஒரு விஷயத்தைக் கூறவிரும்புகிறேன். ஒரு சிறு பெண் என்னிடம் இருந்தாள். எனக்கு ஒரு பையனும் இங்கே இருந்தான், தேவன் இன்னொன்றும் எனக்குத் தரலாம், எனக்குத் தெரியாது. அந்த பையனின் தாயார் இறந்துவிட்டாள். நான்தான் அவனுக்கு தந்தையும், தாயுமாக இருந்து வந்தேன், நான் அவனை நேசிக்கி றேன். அவன் எனக்கு இருந்த ஒரே பையன். தேவன் அவனை நான் எவ்வளவாக நேசிக்கிறேன் என்பதை அறிவார். தேவன் அவனை தேவனுடைய இருதயத்துக்கேற்றவாறு செய்ய வேண்டும் என்று ஜெபிக்கிறேன். அதற்காகத்தான் நான் ஜெபிக்கிறேன். அவன் இப்போது இளம்பருவத்தில் இருக்கிறான், வாழ்க்கையின் ஆபத்தான சமயம் இதுதான். நீங்கள் எல்லாரும் என்னுடைய பையனுக்காக ஜெபித்துக்கொள்ளும்படி விரும்பு கிறேன். அவன் ஒரு நல்ல பையன். அவனுக்கு ஏறக்குறைய ஆறுவயதில் ஒரு சிறிய தங்கையும் கூட இருக்கிறாள். அந்த சிறு சகோதரிக்கு, தேவன் என்னை உயிரோடு வைத்தால், ஒரு தாயாகவும், தந்தையாகவும் இருந்து தேவனுக்குப் பிரியமான குழந்தையாக எழும்பப் பண்ணுவேன். தேவன் அக்குழந்தையை உபயோகப்படுத்தப்போகிறார். அன்றொரு இரவு அச்சிறுமி கட்டிடத்தின் முன்பகுதியில் இருந்தாள். அவளது வயதான ஏழைத் தாய் புற்றுநோயால் இங்கு படுத்துக்கொண்டு, இறந்து கொண்டிருக்கிறாள். அவள் அங்கே எங்கோ சாய்ந்து கொண்டிருந்தாள். நான் காரிடம் போனேன், எனக்கு நன்றாக இருப்பதாகத் தோன்றவில்லை, என் பையன் "டாடி, உங்களால் காரை ஓட்டமுடியுமா?" என்று கேட்டுக் கொண்டே இருந்தான்.

"அப்படித்தான் நான் நம்புகிறேன் மகனே" என்று சொன்னேன். நான் தொடர்ந்து வந்து கொண்டிருந்தேன். நான் சரியாக இருப்பதாக உணர்ந்தேன். நான் சிறிது பலவீனமாகவும், குழப்பமுற்றவனாகவும் இருந்தேன். நான் புறப்பட்டேன், அவளது தாயார் அச்சிறுமியை அடக்கிக் கொண்டிருந்தாள். நான், "ரெபெக்காவுடன் என்ன விஷயம்?" என்றேன். அவள் ஏதோ சொல்ல முயற்சித்துக் கொண்டிருந்தாள். நான் என் கண்களை சாலையின் போக்குவரத்து மற்றும் பிறவற்றில் வைத்துக் கொண்டு, வலது கை பக்கமாக மெதுவாக காரை ஓட்டிக் கொண்டிருந்தேன். சிறிது நேரம் கழித்து, அவள் தனது சிறு கரங்களை என் தோளைச் சுற்றிப் பிடித்து அழ ஆரம்பித்து விட்டாள். பால்கனியில் போய் உட்கார்ந்துகொண்டாள். "டாடி" என்று கூப்பிட்டாள். அவளுடைய இரண்டு சிறிய பற்கள் வெளியே வந்தும், சிறு காலியிடம் பற்களில்லாமலும் இருந்தது. அவள், அழுது கொண்டிருந்தாள், அவளது சிறிய இருதயம் குழப்பமுற்று இருந்தது. அவள், "நீங்கள் இன்றிரவு ஜெபிக்க வேண்டும் என்று விரும்பும் எல்லாரும் உங்கள் கைகளை உயர்த்துங்கள்" என்று சொல்லும்போது, இந்த சிறு ஏழை தாயும் கூட

அங்கே பின்பாகத்தில் படுத்திருந்தாள். அவளால் உங்களைப் பார்க்கமுடியவில்லை. உங்களாலும் அவளைப் பார்க்க முடியவில்லை , டாடி, அவள் தன் கரங்களை உயர்த்தினாள். அங்கு ஜனங்கள் நின்று கொண்டிருந்தனர். நீர் அவளைப் பார்க்க முடியவில்லை. அவள் தனது கையை நீர் பார்க்க வேண்டும் என்று முயற்சித்துக் கொண்டிருந்தாள்," என்று கூறினாள். மேலும் அவள், டாடி, நீங்கள் அவளுக்காக ஜெபித்தால், இயேசு அவளை சுகமாக்கப்போகிறார்" என்றாள். அது என்னுடைய இருதயத்தை நொறுக்கியது.

16 நான் தொடர்ந்து போனேன். அவள் சொல்வதற்கு முன்பே நான் நினைத்தேன். அங்கே சிறு கக்கதண்டத்தை வைத்துக் கொண்டு, ஒரு சிறுவன் (போலியோ நோயினால் பாதிக்கப் பட்டவன்) நடந்து கொண்டிருந்தான். "நான் போய் அந்த சிறு பையனுக்காக ஜெபித்தால், தேவன் அவனை குணமாக்குவார்" அது அப்படியே ஆனது.

அதன் பிறகு, நான், அவள் அங்கிருந்தாள், சிறிது அதிகமாகவே உணர்ச்சிவசப்படக்கூடிய குழந்தையாய் அவள் இருந்தாள். நான் அது பற்றி நினைத்தேன். நான், "நல்லது, தேனே, டாடி எல்லாருக்காவும் ஜெபித்துள்ளேன்".

"ஆமாம்" என்றாள். ஆனால் 'தேனே' அவள், "அந்த ஏழை வயதான ஸ்திரீயால் எழுந்திருக்கவே முடியவில்லை " எனக் கூறினாள். அவள் தனது கைக்குட்டையை எடுத்து அசைத்துக் காட்டி முயற்சித்தாள். உங்களால் அவளைப் பார்க்க முடிய வில்லை, டாடி. அவள் தனக்குள்ளாகவே அழுது கொண்டு அந்த இரவு உறங்கினாள். அங்கே உறங்கும் வரை அவள் மூக்கை உறிஞ்சிக்கொண்டும், அழுது கொண்டே இருந்தாள்.

அடுத்த இரவு, அவள் பால்கனியில் உட்கார்ந்திருந்தாள். அவள் யாரைக் குறித்துப் பேசினாள் என்று எனக்குத் தெரியவில்லை. ஏனெனில் அந்தப் பெண்மணி அங்கே பின்பக்கத்தில் இருந்தாள். மேலும் அங்கே சில கட்டில்களும், நோயாளிகளை இழுத்துச் செல்லும் வண்டிகளும் இங்கே இருந்தன. அந்த இரவிலே தானே பரிசுத்த ஆவியானவர் சுற்றிலும் அசைவாடி, அந்தப் பெண்மணியைப் பற்றிக் கொண்டது நடந்தது. அவள் முன்பாகத்திலே படுத்துக் கொண்டிருந்தாள், அவளைக் குறித்துப் பேசி அவளுடைய நிலைமைகளைப் பற்றி பேசினார். அவள் புற்றுநோயிலிருந்து குணமாகி இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் சுகமாக்கப்பட்டாள் என அறிவிப்பும் செய்யப்பட்டது. கடந்த இரவு பிரசங்க பீடத்தில் நீங்கள் வாசிக்கக் கேட்ட கடிதம் அதுவே. அவள் அவளது வீடு திரும்பினாள். அவளுடைய மருத்துவர் மற்றும் அவர்கள் எல்லோருக்கும் அவள் முற்றிலும் சுகமாக்கப்பட்டு நன்றாக இருக்கிறாள் என்பது தெரிந்தது. நான் உங்களுக்குச் சொல்கிறேன், அல்லேலூயா, ஓ, தேவனே ஆசீர்வதியும், என்னுடன் அந்த விஷயம் என்ன என்பது எனக்குத் தெரியாது. ஆனால் நான் அவரை என் முழு இருதயத்தோடு நேசிக்கிறேன்.



இதுசரிதானே ஐயா? அவருக்கு நம்மிருவரையும் அவர் அறிந்திருக்கிறார். மேலும் - மேலும் நீர் இங்கு இன்றிரவு சுகம் பெறும்படியாகவும் அல்லது ஏதாவது தவறாயிருந்தாலும் அதற்காக விசுவாசிக்கிறீரா? வந்துள்ளீர், இந்த உலகத்தில் உங்களை குறித்துத் தெரிந்துகொள்வதற்கான எந்த வழியுமே எனக்கு இல்லை. ஏதோ ஒரு வழியில் தேவன் வெளிப்படுத்தினால் ஒழிய எனக்கு எதுவும் தெரியாது. நீர் இதை நீர் - நீர் விசுவாசிக்கிறீர். மேலும்

இருதயத்தின் உண்மையோடு, நீங்கள் இயேசுகிறிஸ்துவே தேவகுமாரன் என்னும் சத்தியத்தை கேள்விப்பட்டதை விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் விசுவாசிக்கிறீர்கள். அவரை ஒரு தரிசனத்தின் மூலம் ஒரு தீர்க்கதரிசி, இந்த இரவிலே காணப்படுவான் என்பதை உரிமை கோருகின்றதைக் குறித்து நான் அப்படிப் பிறந்தேன்... என்பதின் சத்தியத்தை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? உங்களுக்கு என்ன தவறு இருக்கிறது அல்லது இல்லாமலும் இருக்கலாம் என்பதை நான் சொல்லாமல் நான் உங்களுக்காக ஜெபித்து கடந்து சென்று விட்டாலும் நீங்கள் எப்படியும் நம்புவீர்கள், இல்லையா?

28 ஒருக்கால், அவர் விளக்கிக் கூற இயலும். ஆம், ஐயா. உங்கள் அருகே ஏதோ ஒன்று நிச்சயமாக - பரிசுத்த ஆவியானவர் இருப்பின் நீங்கள் இந்த உணர்வுக்குள் பழகவில்லை . நீங்கள் ஒரு ... சங்கோஜ மனிதர், பாருங்கள். நீங்கள் தூரத்திலிருந்து வருவதைப் பார்க்கிறேன். நீங்கள் இங்கே எங்கிருந்தோ தூரத்திலிருந்து வந்துள்ளீர்கள். அதுசரிதானே? நீங்கள்...நீர்...நீர்...நீங்கள் வேறு இடத்திலிருந்து இங்கு வந்துள்ளீர்கள். நீங்கள் வேறு எங்கோ இருந்து இங்கே வந்திருக்கிறீர்கள். வேறு யாரோ இங்கு உங்களை யாரோ கூட்டிக் கொண்டு வந்துள்ளார்கள் அல்லது இங்கு வரும்படி சொல்லி யிருக்கிறார்கள்.

நீங்கள்... இல்லை. நீங்கள், உங்களுக்கு இருந்த ஏதோ ஒன்றிலிருந்து விடுதலையடையப் போவதற்காக இங்கே இருக்கி றீர்கள், அது சரிதானே? ஏதோ ஒரு காரியம் உங்கள் வாழ்வை அழிப்பதும், உங்கள் வாழ்க்கையை உடைப்பதுமாயுள்ளது. அது சரியா? அது மது அருந்துதல். நீங்கள் ஒரு ஆல்ஹாலிக். நான் தவறாகப் புரிந்துகொள்ளப்படவில்லையெனில், யாரோ ஒருவர் நீங்கள் வடபகுதியைச் சேர்ந்தவர் இங்கு தென் பகுதிக்கு வந்திருக்கிறீர் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுசரியா? இப்போது அவரை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளுகிறீர்களா? இந்த மணிநேரம் முதல் அவர் ஒருவர் மாத்திரமே இந்தக் காரியத்தை உம்மிடத்திலிருந்து வெளியே எடுத்துப் போட முடியும் என்று விசுவாசிப்பீர்களா? சரி. நீங்கள் இப்போது அவரை உம்முடைய இரட்சகராக ஏற்றுக்கொள்ளுங்கள். அவர்தான் தேவனுடைய குமாரன் என்றும், அவர்தான் உம்முடைய பாவங்களைப் போக்கக் கல்வாரியில் மரித்தார் என்றும் இப்போது விசுவாசியுங்கள். நீங்கள் அதை செய்ய விரும்பவில்லை, நீங்கள் உங்களையே அழித்துக் கொள்கிறீர்கள், சாத்தானுடைய நரகத்திற்கும், பாவிகளுடைய கல்லறைக்கும் உங்களை நீங்களே அனுப்புகிறீர்கள், நீங்கள்

ஏற்றுகொள்ளுங்கள். நரம்புகள் அமைதலாகவும் நுரையீல்கள் சாதாரண நிலையிலுள்ள, காய்ந்த நுரையீரல் போலாகவும் வேண்டுமென விசுவாசியுங்கள். நீங்கள் அவ்வாறு விசுவாசிக்கிறீர்களா? முன்பதாக வந்து ஆசீர்வா தத்தைப் பெற்றுகொள்ளுங்கள்.

சர்வ வல்லமையுள்ள தேவனே, வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தவரே, இந்த மனிதனின் நுரையீரலை உண்டாக்கினவரே, நீர் மோசேயிடம் பேசும்போது அவன் “என்னால் நன்றாக பேசமுடியாது” என்றான். நீர், “மனிதனுடைய வாயை உண்டாக்கினவர் யார்? என்று கேட்டீரே, நீர் தாமே இந்த மனிதனின் வாயில் வார்த்தையைப் போட்டீர். நீரே அவனுடைய சரீரத்தை உண்டாக்கினவர். மேலும் கர்த்தராகிய தேவனே, சொல்வதற்கு நான் யார்? தெரிந்தளவு இது இம்மணி வேளையிலே வந்துள்ளது.”அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாய் நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்“. தேவனே, என்னுடைய முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு உள்ளத்தோடும், இப்பொழுதே, நான் ஜெபிக்கிறேன். இந்த மனிதனின் மீது உம்முடைய சுகமாக்கும் கிருபை கிடைப்பதாக. அவனுடைய நுரையீரல்களை இப்படிப்பட்டதான நிலைமை நீங்கி, மற்றவர்களும் இதைக் கண்டு, தேவன் அவனுக்கு என்ன செய்தார் என்பதைக் காணும்படியாகச் செய்யும். ஒரு சாட்சியை நாங்கள் பெற்றுக்கொள்ளட்டும்.

அவர்கள் அவனிடத்தில் எந்தவிதமான அடிச்சுவட்டையும் கண்டுபிடிக்காதபடி அவன் தன்னுடைய சாட்சியைக் கொடுக்கட்டும். மேலும் மருத்துவரிடம் பேசும்போதும், அவன் சந்தோஷத்தோடு, “மருத்துவரே! நான் கர்த்தராகிய இயேசுவை நம்பினேன், அவர் எனக்கு இதைச் செய்தார்” என்று கூறட்டும். தேவனே, இதை அருளும். மருத்துவருக்கே இது ஒரு சாட்சியாக இருப்பதாக. நீர் ஒரு மகத்தான வைத்தியர் என்று அவர்கள் விசுவாசிப்பார்கள் என்பது இதினால் எங்களுக்கு தெரியும். அவர்கள் உமக்குக் கீழாகவும், உம்முடைய மேற்பார்வையிலும் தான் வேலை செய்கிறார்கள். தேவனே, எங்கள் சகோதரனை ஆசீர்வதித்து, இயேசுவின் நாமத்தில் சுகமாக்கும், ஆமென். அதுசரி. என் சகோதரனே, என்னுடைய முழு இருதயத்தோடும், உனக்கு நிவாரணம் சமீபத்திலிருக்கிறது, நான் விசுவாசிக்கிறேன். தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக.

27 ஓ, தேவனே, வியாதியஸ்தர் மற்றும் தேவையுள்ளோர் மீதும் இரக்கம் வையும். எப்படியாக அவர்... அவருடைய இரக்கம் நிலைத்திருக்கிறது.

நீங்கள் எப்படியிருக்கிறீர்கள் ஐயா? சரி. இப்போது, நான் உங்களுக்கு ஒரு அந்நியன். இது சரியா ஐயா? நான் - நான் எனக்கு உங்களைத் தெரியாது. நீங்கள் எனக்கு ஒரு அந்நியன். எனவே நான்... எனக்குத் தெரிந்த அளவு, நான் உங்களைப் பார்த்ததே இல்லை. நான் ஒருவேளை... நான் - நான் - நான் உங்களுக்குப் பரிச்சயம் இல்லாதவன். அல்லது ஆனால்... நம் இருவரையுமே தெரிந்த ஒருவர் இருக்கிறார்.



17 சரி. ஜெப அட்டைகளை நாம் பார்க்கலாம். நாம் இருந்த வண்ணமாக இந்த இரவு தொடங்கலாம். நாம் வியாதியஸ்தருக்காக ஜெபிக்க ஆரம்பிக்கலாம். (ஒலி நாடாவில் காலியிடம் - ஆசி) ஒவ்வொருவரையும் எழுந்து நிற்கும்படியும் அதே வியாதிக்காக ஜெபிக்கும்படியும் இந்த சமயத்தில் கேட்கிறேன். அது. நமது கர்த்தர் ஆச்சரியமானவைகளைச் செய்து வருகிறார் என்று நினைக்கிறேன். நீங்கள் அப்படி நினைக்கவில்லையா? அது அற்புதமானது.

மேலும் இப்போது, நான்... இது அங்கே மறுபடியும் அங்கே யாரோ இந்த இடத்தைச் சுற்றி விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். அது ஒரு அவிசுவாசி எவ்வளவாக செய்ய முடியுமோ அப்படியாக அது உள்ளது.

மேலும் நான், சிலசமயம், 'நீ யார்' என்பதையும் பார்க்கிறேன், என்று நம்புகிறேன். உன்னுடைய ஆவியை உணர்ந்தேன். அப்படியானால், உன்னை இப்பொழுதே கூப்பிடப் போகிறேன். எனவே அதைக் குறிப்பெடுத்து வை. பார்? நாம் கூட்டத்திலிருக்கும் ஒவ்வொரு இரவும் அது இங்கே இருக்கிறது. மேலும் நான் அது யார் என்று கவனித்துக்கொண்டே பார்த்துக் கொண்டிருக்கிறேன். நான் நம்புகிறேன், அது.. அது இங்கேயுள்ள பார்வையாளர்களுக்கு வெளியே உள்ளது. இது கட்டிடத்தில் உள்ளது என்று நினைக்கிறேன். ஆனால் அது பார்வையாளர் களுக்கு வெளியே உள்ளது. மேலும் நான் கவனிக்கிறேன். நான் ஜெபிக்கிறேன், தேவன் 'நீ யார்' என்பதைக் காட்டுவார்.

நான் அதிலிருந்து அநேகந்தரம் விலகியிருந்தேன்; ஆனால் நான் பேதுரு அதைச் செய்யவில்லை. அவர் அனனியா, சப்பீராளிடத்தில் எங்கே அது கிடந்தது என்று சரியாகச் சொன்னார். அதுசரி. அது அனைத்தையும் கூட பாதித்தது.

18 சரி. இப்பொழுது உங்கள் முழு இருதயத்தோடு நம்புங்கள். ஒவ்வொரு கிறிஸ்தவனும் இப்போதே இயேசுகிறிஸ்துவிடம் உங்கள் விசுவாசத்தை வீசுங்கள். “கர்த்தாவே, நாங்கள் மேலே இழுக்கப்படுகிறோம், மேலே நங்கூரமிடப்படுகிறோம், இறுகப் பிடிக்கப்படுகிறோம்” என்று சொல்லுங்கள். மேலும் இங்கிருக்கும் அநேகர், நீங்கள் எத்தனை பேர் இதற்கு முன்பு கூட்டத்தில் இருந்திருக்கிறீர்கள்? உங்கள் கைகளை நாங்கள் காணட்டும். ஓ, நீங்கள் ஏறக்குறைய எல்லோருமே என்று நினைக்கிறேன். உங்களுக்கு, தேவனுடைய ஆவியானவரின் செயல்பாடு தெரியும். இப்போது, உங்களுடைய கொண்டு வாருங்கள்.

ஓ, இது, இது அந்த ஸ்திரீ. சரி. இந்த ஸ்திரீ இங்கு நின்று கொண்டிருக்கிறாள். நான் - நான் உன்னை ஒருபோதும் பார்த்ததில்லை. நான் நினைக்கவில்லை நீ , எனக்கு ஒரு அந்நியவள், அப்படித்தானே, உன்னை எனக்குத் தெரியாது. இப்போது இந்த ஸ்திரீ இங்கே நின்று கொண்டிருக்கிறாள். இந்த உலகில் ஒரு வழியும் இல்லை. தேவன் அறிவார். தேவனுக்கு இந்த ஸ்திரீயைத் தெரியும். ஆனால் இதற்குமுன் எப்போதாவது நான் உன்னைக் கண்ணால் கண்டதுண்டா? ஏதாவது

தொடர்பு இதற்கு முன் இருந்ததுண்டா ? எப்படியோ... தேவன் புரிந்து கொள்கிறார், பாருங்கள்? அவளைப் பற்றி எனக்கு எதுவுமே தெரியாது. அவள், அந்த பெண்தான் இங்கே நடந்து வந்துள்ளாள். இதுதான் நீ இங்கு வந்திருக்கும் முதல் ஜெபக் கூட்டமா? உன்னுடைய முதல்... இதற்கு முன்பு இங்கு இருந்திருக்கிறாயா? நீ இதற்கு முன் இங்கு இருந்திருக்கிறாய். உன்னுடைய நான் சொன்னதின் பேரில் உன்னுடைய மனநிலை என்ன? நீ இது சத்தியம் என்பதை விசுவாசிக்கிறாயா? நீ இது சத்தியம் என்பதை விசுவாசிக்கிறாய். மேலும் நான் உன்னை குணமாக்க முடியவில்லை என்பதை நீ - நீ புரிந்து கொள்கிறாய். நான் ஒருவேளை... உன்னை குணமாக்கக் கூடிய எதுவும் என்னிடத்தில் இல்லை. ஆனால், இங்கு ஒரு வரம் உள்ளது. என்னிடத்திலிருந்து உன்னுடைய ஜீவியத்தை நீ மறைக்க முயன்றாலும், அது உன்னால் முடியாது. பார்? உன்னால் அது முடியாது.

19 மேலும் அதில், அங்குள்ள பார்வையாளர் மற்றும் உனக்கும் இங்கு தேவன் பிரசன்னராயிருக்கிறார் என்று தெரிந்து கொள்ளும் அறிவு கொடுக்கப்பட்டுள்ளது. அது சரியில்லையா? அது பரிபூரணமாக சரிதான். சரி, அது ஆவிக்குரிய தெய்வீக வெளிப் பாட்டுடன் தேவனுடைய வல்லமையினால் வரவேண்டியுள்ளது. நீ அதை விசுவாசிக்கிறாயா? நான் உன்னுடைய ஆவியை சரிபார்க்கிறேன். (பார்?) பார், நீ... ஒருவேளை, எனக்குத் தெரியும் - நீ ஒரு விசுவாசி நீ ஒரு கிறிஸ்தவள். சில நேரங்கள், சிலர் என்னை அவ்வாறு வஞ்சிக்க முயற்சித்தனர். என்ன நடந்தது என்று நீ கேட்டிருக்கிறாய். வஞ்சிக்க முயற்சி செய்ய வந்து தோல்வியடைந்து அவர்கள் சென்றிருக்கின்றனர், சரி.

இப்போது, நேர்மையுடன் நீங்கள் வந்துள்ளீர்கள் என்று நம்புகிறேன். ஆனால், நீங்கள் அந்நியர்கள். இப்போது அந்த ஸ்திரீ இங்கே இருக்கிறாள். இப்போது உங்களுக்குத் தெரியலாம், பார்வையாளரில் யாருக்காவது அவளைத் தெரியுமா? உங்கள் கைகளை எங்கிருந்தாலும் உயர்த்துங்கள். நான் எந்தக் கைகளையும் பார்க்கவில்லை , நீ இந்த சுற்றுப் பகுதியிலிருந்து வரவில்லை. இச்சுற்று பகுதியிலிருந்து வருகிறீர்களா? இல்லை. நீங்கள் இங்கிருந்து தூரத்திலுள்ளீர்கள். சரி... சரி... உன்னை நம்பக் கூடிய எந்த காரணமும் எனக்கு இல்லை . ஆனால் நீ ஒரு உண்மையான ஸ்திரீ. கிறிஸ்தவளாயிருப்பதனால், நீ கிறிஸ்தவளாய் இருப்பதனால் உன்னுடைய வார்த்தையை எடுத்துக் கொள்கிறேன்.

20 இப்போது, பாருங்கள், பார்வையாளர்களே, ஒருவேளை, இந்த ஸ்திரீக்கு காசநோய் எனப்படும் க்ஷயரோகம் இருக்கலாம். அவளுக்கு ஸ்திரீகளுக்குரிய பிரச்சனை இருக்கலாம். அவளுக்கு... அந்த ஸ்திரீக்கு என்ன தொந்தரவு என்று எனக்குத் தெரியாது. ஆனால் தேவன் தம்முடைய இரக்கத்தில் கீழே இறங்கி வந்தால், நான் அவளிடம் பேசும்போது, அபிஷேகத்தின் கீழே, அவளது நிலைமையை சொல்லும்போது, நான் சத்தியத்தையே உங்களிடம் கூறினேன் என்று நீங்கள் ஏற்றுக்கொள்ள



மகத்தான சுகம் கொடுப்பவராக நீ ஏற்றுக்கொள்வாயா? நீ அப்படிச் செய்வாயா? நீ பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறாயா? போ, இயேசுகிறிஸ்துவின் நாமத்திலே, ஸ்திரீயே தேவன் அதை உங்களுக்குத் தந்தருள்வாராக. ஒவ்வொருவரும் பயபக்தியாயிருங்கள். உண்மையான பயபக்தியாயிருங்கள். உங்கள் முழு இருதயத்தோடு விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்.

25 இப்போது நான் - நான் உங்களுக்கு அந்நியன், நான் அப்படித்தான் நம்புகிறேன், ஐயா. அது சரியா? நான் - நான் ஒரு அந்நியன். நான் - நான் - நான் - நான் உங்களை எனக்குத் தெரியாது. தேவன் மாத்திரமே உங்களை அறிவார். நான் அல்ல. அதுசரி. மேலும் நான் உங்களை அறிவதற்கு உள்ள ஒரே வழி

ஒரு நிமிடம், இரண்டாவது ஸ்திரீ, அங்கிருக்கிறாள். அவளுக்கு உயர் இரத்த அழுத்தம், அந்த வரிசையில் தானே அவள் உட்கார்ந்து இருக்கிறாள். நீங்கள் வேண்டுமானால், எழுந்து நிற்கலாம். கிறிஸ்து இப்பொழுதுதான் உங்களை சுகமாக்கியுள்ளார். எழுந்து நில்லுங்கள், அதுசரி, அதுசரி. அது அருமையானது, நன்றி. உங்களுக்கு சரியாக முன்பாக நரைத்தத் தலையோடு உட்கார்ந்து இருக்கிற அந்த ஸ்திரீக்கும் அதே தொந்தரவு இருந்தது. ஆம் அம்மணி. அதுசரி தானே. நீங்கள் இருவரும் எழுந்து நிற்கலாம். உங்களுக்கு இருந்த உயர் இரத்த அழுத்தத்திலிருந்து நீங்கள் சுகமடைந்துள்ளீர்கள். நான் ஒரு கோடு. பாதரசம் போன்ற ஒன்று வழிந்தோடுவதுபோல, அது அந்த இரண்டு ஸ்திரீகளைப் பிடித்துள்ளது போல கண்டேன். இந்த மனிதனுக்கு மேலே அது வழிவது போல நான் காண்கிறேன். மேலும் பரிசுத்த ஆவியானவர் என்னிடம், “இப்போது அவர்கள் சுகம்பெறக்கூடிய நேரம் இது” என்று கூறினார். தேவன் உங்களை ஆசீர்வதிப்பார். வீடு திரும்புங்கள். யெகோவா தேவன் உங்களோடு இருப்பார்.

26 அவர் ஆச்சரியமானவர் அல்லவா? விசுவாசமாயிருங்கள். சரி. அவருடைய தீர்க்கதரிசியாக என்னை நீங்கள் நம்புகிறீர்களா? ஐயா? (ஒலிநாடாவில் காலியிடம் - ஆசி) தண்ணீரானது பாதையில் வழிந்தோடுகிறது அல்லது அதுபோல் ஏதோ ஒன்று. அது சரியில்லையா? அது உண்மையா? ஐயா? அது .. சரி. அதை அவர்களால் இது இங்குள்ளது என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை . இது நரம்புத் தளர்ச்சியோடு சம்பந்தப் பட்டுள்ளது. உங்களுடைய நுரையீரலில் நீர் சேர்ந்து கொண்டேயுள்ளது. அது சாத்தானின் ஒரு சக்தி. இவ்வுலகில் எந்த ஒரு மருத்துவராலும் ஒருபோதும் அதைக் கண்டுபிடிக்க இயலாது. அவரால் அதற்கென அவரால் எதுவும் செய்யமுடியாது. அவரால் முடிந்தது எதுவென்றால், அவர் கைகளை வைத்து வேலை செய்வார். நான் மருத்துவரை அவமரியாதை செய்யவில்லை , அவர் ஒரு மனிதர். தேவன் அவரை இங்கு உதவி செய்ய அனுப்பியுள்ளார். ஆனால் அவர் அறிவைக் கொண்டு வேலை செய்கிறார். இதுதான் பரிசுத்த ஆவி. பாருங்கள்? அதுதான் நிவாரணம், இதுதான் குணமடைதல். பாருங்கள்? நீங்கள் என்னை நம்புகிறீர்களா? நீங்கள் அவரை உங்களுக்கு சுகமளிப்பவராக

இருக்கிறார், அவர் ஜனங்களின் மத்தியில் தம்முடைய கிரியைகளை தெரியப்படுத்துகிறார் என்பதை நீங்கள் விசுவாசிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். நீங்கள் இப்போது விசுவாசிக் கிறீர்களா? சரி. அந்த ஸ்திரீ, ஒரு செவிட்டு ஆவியானது எனக்கு எதிராக அசைவாடிக் கொண்டிருக்கிறது. அது நான் இல்லை. அது அவள் மீது இருக்கிறது. ஆமாம். நீ..?.. செவிடு. அது அப்படியாகத்தான் இருந்தது. சரி. உங்கள் தலையைத் தாழ்த்துங்கள். நான், அவள் பேசுவதைக் கேட்டேன். ஆனால் அவள் பேசிக் கொண்டிருந்திருக்கலாம். ஆனால் கேட்கவில்லை. உங்கள் தலையைத் தாழ்த்துங்கள். ஒரு நிமிடம், சர்வ வல்ல தேவனே, மகத்தான யெகோவாவே, எரிகின்ற அக்கினி சூளையிலே இறங்கி வந்தவரே. அந்த உஷ்ணமான இடத்தில் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் வந்து, அசைவாடி அம்மக்களிடம் பேசியவரே, நான் உம்மிடம் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். நீர் இங்கு நின்று கொண்டிருக்கும். இந்த ஏழை ஸ்திரீக்கு உதவி செய்யும். அவளுக்கு உமது இரக்கத்தைத் தாரும்.

ஓ, தேவனே! அவளது செவிகளைத் திறந்து, இன்றிரவே அவளுக்குக் கேட்கும் திறனைக் கொடுக்கவும், வேதாகமத்தில், 'செவிட்டு ஆவி ஒரு மனிதனை விட்டுப் போகும் போது, அவனால் கேட்கமுடியும்' என்று எழுதியுள்ளதால் தேவனே, இன்றிரவு இந்த ஏழை ஸ்திரீ குணமடையும் படியான விசுவாசத்தை அவளுக்குக் கொடுக்கும்படியாக நான் ஜெபிக்கிறேன். இப்போது, உமது ஊழியனாக எனக்கு உதவி செய்யும் தேவனே, இந்த ஸ்திரீயின் காதுகள் திறக்கப்படும் படியும், அதனால் நான் அவளுடன் பேசும்படியும் விசுவாசத்தைக் கொடும்.

இப்போதும் செவிட்டு ஆவியே! நீ ஒரு பிசாசு, இந்த ஸ்தீரியின் காதுகளில் புகுந்து அவளைக் கேட்க விடாமல் நிறுத்தியிருக்கிறாய், நான் இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரனாக, அவருடைய ஜனத்திற்கு அவருடைய பிரதிநிதியாக இங்கே இருந்து ஜனங்களுக்கு அவரைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறேன். அவர் துரைத்தனங்களை உதறிப் போட்டார். சாத்தானின் எல்லா அதிகாரங்களையும் கல்வாரியில் பறித்துக் கொண்டார். அவர் உன்னையும் இந்த ஸ்திரீயின் மேலுள்ள உன் பிடிமானத்தையும் பறித்துக் கொண்டார். நான் இன்றிரவு ஜெபத்தின் வழியாக அவரை பிரநிதித்துவப்படுத்துகிறேன். என்னுடைய கர்த்தர் அந்த நாளிலே உன்னுடன் சொன்னவிதமாக "அது எழுதப்பட்டிருக்கிறதே" என வேதவாக்கியத்தில் எழுதப்பட்டிருக்கிறது. என்னுடைய நாமத்தினாலே அவர்கள் பிசாசுகளைத் துரத்து வார்கள்" "இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நான் சொல்லுகிறேன், அந்த ஸ்திரீயை விட்டுவிடு அவளிடத்திலிருந்து வெளியே வா.

கேட்கிறதா? கேட்கிறதா? இப்போது நான் சொல்லுவதைக் கேட்க முடிகிறதா? "ஆமென்" எனச் சொல்லு. "ஆமென்" இப்பொழுது நான் குசுகுசுவென்று பேசுகிறேன். இப்போது நீ சுகமடைந்துவிட்டாய். நீ வீதியிலே சந்தோஷமாகச் சென்று தேவனுக்குத் துதி செலுத்து. நீ அதைச் செய்வாயா? பார். விநோதமான நம்பிக்கையைப் பெற்றுக் கொண்டவளாயிரு. நீ வித்தியாசமானவள். இயேசுகிறிஸ்துவை அந்த



மனதாயிருப்பீர்களா? ஒருவேளை... ஒருவேளை நான் - ஒருவேளை - ஒருவேளை இங்கே நான்... அந்த ஸ்திரீ, இப்போது அவளுக்குத் தெரியும், ஒன்றுமேயில்லை அங்கு ஒன்றுமேயில்லை அவளைப்பற்றி எனக்கு தெரிந்தது. ஒன்றுமேயில்லை என்பதே, நாம் அந்நியர்கள், மேலும் தேவன் எனக்கு வெளிப்படுத்தினால், அவளுக்கு என்ன தவறாயிருக்கிறது என்பது குறித்து, பின்னர் மோசே சொன்னது போல அதுவே போதுமானது. அவன் ஒவ்வொரு முறையும் இஸ்ரவேலரை சந்திக்கும் போதும், அவன் அவனுடைய கைகளை சொஸ்தமாக்க வேண்டியது இல்லை. கோலை கீழே வீசி அதிலிருந்து சர்ப்பத்தை உண்டு பண்ண வேண்டியது இல்லை. அவன் ஒருமுறை அதைச் செய்தான். எல்லோரும் அதை விசுவாசித்தனர். அது சரியா? இப்போது, தேவன்...?... இவற்றை எல்லாம் ஒரு உறுதிப்படுத்த அதைச் செய்தார்.

21 இப்போது, இயேசுகிறிஸ்துவும் இந்த ஸ்திரீயும் ஒருவேளை.... நான்... நீங்கள் நான் என்ன சொன்னேன் என்று கேட்டிருக்கலாம், மேலும் அவளுக்கும் நான் உண்மையைக் கூறினேனா இல்லையா என்பது தெரியும். தேவனும் அவ்விதமே அதை அறிவார். மேலும் நான் சுவிசேஷத்தின் ஒரு ஊழியன். தேவன் ஒருவேளை, இந்த ஸ்திரீயுடன் தேவன் என் மூலம் பேசுவாரானால், அவளுக்கு என்ன தவறாயிருக்கிறது அல்லது எந்த விஷயமாக இருந்தாலும், என்ன காரணமாயிருந்தாலும், அவளிடத்தில் சொல்வாரானால், அப்போதாவது அங்கிருக்கும் நீங்கள் விசுவாசிப்பீர்களா? இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் என்ற சத்தியத்தின் உண்மையையே நான் கூறுகிறேன், சரி. இப்போது, ஞாபகம் கொள்ளுங்கள் அவர் அவளைக் குணமாக்கலாம் அல்லது குணமாக்காமலும் இருக்கலாம் எனக்கு அது தெரியாது. எனக்கு எனக்கு எதை எதை பார்ப்பேன் என்பது மட்டும் தெரியும்.

இப்போது, ஸ்திரீயே, வலது பக்கம் இங்கே எங்காவது நீ நிற்க வேண்டுமாய், இந்த வழியின் பக்கமாக நிற்கும்படி விரும்புகிறேன். அதனால் ஜெபவரிசையில் வரக்கூடிய வியாதியஸ்தர் ஜெபிப்பதையும், அழுவதையும் மற்றெல்லா வற்றையும் பார்க்க இயலும். நீ அங்கு நின்று கொண்டிருக்கும் வேளையின் போது என்னை ஏதோ இழுப்பது போன்று இருந்தது. அதன் காரணமாகத்தான் நீ அங்கு நின்று கொண்டிருந்த திலிருந்து நான் உன்னோடு அதிக நேரம் பேசிக் கொண்டிருந் தேன். மேலும் சில நேரங்களில் விசுவாசம் எங்கு அதிகமாக இருக்குமோ, அங்கே இப்படியாக... இப்படியாக எல்லா விடத்தும் இருக்கும். மேலும் நீங்கள் - அது கீழே அபிஷேகிக்கப்படும் போது பிறகு எல்லாமுமே சரியாகி விடும். இது மிகவும் கடினம்... சிலசமயம் புரிந்துகொள்ள கடினமாக இருக்கும், இது என்ன என்பது.

22 ஆனால் உங்களோடு இப்போது பேசிக் கொண்டிருக்கிறேன். உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன், பேசிக்கொண்டிருக்கிறேன். இப்போது, நீங்கள் நமது கர்த்தரை விசுவாசிக்கின்றீர்கள். மேலும் அவர் இன்றும் அவ்வாறே உள்ளார் என்று நீங்கள் விசுவாசிக்கின்றீர்கள். இப்போது, இன்றைய தினத்திலே, எல்லாக் காலங்களிலும் அவர்

நம்மோடிருக்கிறார் என்பதாக அவர் வாக்களித்துள்ளார். அவர் அன்று இருந்தது போலவே ஒவ்வொரு காலங்களிலும் அவ்வாறே மாறாதவராக இருப்பார். "நான் எப்போதும், உலகத்தின் முடிவு பரியந்தமும் உங்களோடு இருப்பேன்" அதுதான் அவரது கட்டளையா? நல்லது, அவர் நமது கர்த்தராய் இருப்பின், அவரால் எதையும் தவறாகக் கூற முடியாது. அப்படிக் கூறி, நமது கர்த்தராகவும், நமது தேவனாகவுமே இருக்க முடியாது. அவரால் அப்படியிருக்க முடியாது. பிறகு முழுமையாக அவர் மாறாதவர்.

இப்போது, அவர் இந்த உலகத்தில் இருந்தபோது, ஜனங்களைக் குணமாக்குவதாக உரிமை கோரவில்லை. அவர், "என்னுடைய பிதா எனக்குக் காண்பிக்கும் வரை என்னால் ஒன்றும் செய்ய இயலாது" என்று கூறினார். அதுசரியா? ஆனால் நிச்சயமாக அவரால் முடிந்தது. பிதா எதை அவருக்குக் காண்பித்தாரோ, அவர் பரிசேயர்களை "வேஷதாரிகள்" என்றும் "வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள் மற்றும் பிற எல்லாமும்" என்று அழைத்தார். ஏன், பிறகு அவர் அவர்களது பாவங்கள் முதலானவற்றைப் பற்றிக் கூறினார். அப்படியென்றால் இன்றும் அவர் மாறாதவர்.

அவர் கிணற்றடியிலிருந்த ஸ்திரீயிடம் சிறிது பேசிய பின்பு சொன்னார்... "அதனால்தான், அவர் என்ன தவறாய் உள்ளது என்பதை என்னிடம் கூறும் வரை நான் உன்னுடன் பேசிக் கொண்டிருக்கிறேன். மேலும் நீ பார்ப்பதற்கு ஆரோக்கியமாக உள்ளாய், நீ திடகாத்திரமாய் இருக்கிறாய், ஆனால் தேவன் அறிவார் எனக்குத் தெரியாது. ஆனால் அவர் இப்போது சரியாக இங்கே கவனிப்போடு இருக்கிறாய், ஏதோ நடந்து கொண்டிருக்கிறது, இல்லையா?

இப்போது, அந்த - நண்பர்களை, இங்கு இருக்கும் எல்லாப் பார்வையாளர்கள் அனைவருமே அதை உணர வேண்டும் என்று விரும்புகிறேன். உணருதல் மூலம் அல்ல, இது ஒரு உணர்ச்சியல்ல, இது ஒரு விசுவாசம். ஆனால் அந்த தேவதூதன் சமீபமாய் அசைவாடும் போது, அங்கே நான் ஒரு மனிதன் மிக அருகாமையில் நின்று கொண்டிருக்கும் போது, அதை அவர்கள் உணரவேண்டும். இப்போது, அந்த ஸ்திரீ ஒரு கிறிஸ்தவள். நீங்கள் அவளை நம்புவீர்கள், இல்லையா? அவள் ஒரு கிறிஸ்தவளாயிருப்பின் அறிக்கையிடு... அப்படித்தானே பெண்ணே? உன்னுடைய கைகளை உயர்த்து, அருகில் ஏதோ ஒன்று வருகிறது என்பதை அறியும் வண்ணமாக, இந்தப் பக்கத்திலிருந்து, அது அசைந்து வருகிறது. அதுசரி.

23 இப்போது, அவர் ஒருவரே உன்னை அறிந்துள்ளவர். நான் அல்ல. உனக்கு அநேக தொந்தரவுகள் உள்ளன. உன்னைச் சுற்றி எல்லாம் இருளாயிருக்கின்றது. அது எதைக் குறிக்கிறது என்பது எனக்குத் தெரியும். தரிசனத்தின் வியாக்கியானத்தின் மூலம், உன்னருகில், எங்கேயோ ஒரு தொந்தரவு இருக்கிறது. ஆமாம். இது ஒரு கட்டி. அது சரிதானே? இது ஒரு கட்டி இருப்பதன் நிலைமை. சொல். அது ஒரு அது. அது தலையில் இருந்தது. அது சரிதானே? இது சரிதானே? அது..



அதற்கென ஒரு அறுவை சிகிச்சை நடந்தது. நான் ஒருவரை, முகத்தில் முகமூடி அணிந்தவர், அறுவை சிகிச்சை செய்வதைப் பார்க்கிறேன். அது உண்மையாய் இல்லையா? அந்தக் கட்டி. ஆமாம், ஆமாம்... இப்பொழுது நீ அதை கவனித்துக் கொண்டிருக்காய், அந்த மருத்துவர் எதையோ இன்னொன்றை பின்பாக வைக்கப் பார்க்கிறார். அவர் கையில் எதையோ பிடித்துக் கொண்டுள்ளதை நான் பார்க்கிறேன். அதைச் செய்வதற்கு உனக்கு விருப்பமில்லை. தேவன் உன்னைக் குணமாக்க, நீ அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும். அது சரியா? அது என்னை விட்டுப் பிரிந்து விட்டது. அவைகள் சரியானதா? அது உண்மையா? ஒவ்வொரு துளியும் உண்மையா? நீ இப்போது நான் பேசுவதைக் கேட்கிறாய், இல்லையா? ஆனால், அது நான் இல்லை சகோதரியே, அது வேறு ஒருவர். அது என்னுடைய சத்தம், ஆனால் வேறு ஒருவர் பேசிக்கொண்டிருக்கிறார். நீ இதை நம்பு. இங்கே வா! ஒரு நிமிடம்.

பிதாவே, உம்முடைய பரிசுத்த குமாரன், இயேசுவின் நாமத்தில் உம்மிடம் இந்த ஏழை ஸ்திரீக்காக ஜெபிக்கிறேன். அவளுடைய எல்லா நிலைமைகளையும், அவளுக்குரிய தொந்தரவுகளையும் நீர் அறிவீர். அவளுக்கு இரங்கும்படியாக நான் கேட்கிறேன். தேவனே, உமது ஊழியனாக, என்றோ ஒரு நாள் இவ்வுலகைவிட்டுச் செல்லக் கூடியவனாக, இயேசுவின் நாமத்தில், எனக்குக் கொடுக்கப்பட்ட வேலையை முடிக்கும் படியான என் முயற்சிக்காகக் கேட்கிறேன். "அவர்கள் வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள்; அவர்கள் சொஸ்தம் அடைவார்கள்". எல்லாம் வல்ல தேவனே, இந்த ஸ்திரீயின் சுகமளித்தலுக்காக இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் நான் கெஞ்சுகிறேன், ஆமென்.

இப்பொது சகோதரியே, என் முழு இருதயத்தோடு, நீர் தேவனால் இப்போதே ஆசீர்வதிக்கப்பட்டுள்ளீர்கள் என்று விசுவாசிக்கிறேன். நீங்கள் வீடு திரும்பலாம். நான் உங்களுக்காக ஜெபித்ததினால் அல்ல, ஆனால் நீங்கள் விசுவாசித்ததினாலேயே. இல்லை அம்மா, நான் நினைக்கவில்லை... நான் எல்லாம் முடிந்து விட்டது என்று நினைக்கிறேன். இப்போது, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. அவ்வளவுதான். தேவன் உங்களை ஆசீர்வதிப்பார். அவள் தன்னுடைய சாட்சியை எழுதி அனுப்பப் போவதாகக் கூறுகிறாள்.

24 இப்போது பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் என்மீது உள்ளது. பாருங்கள்? இப்போது உள்ளது. நான் எவ்வளவு நேரம் இன்றிரவு நின்று கொண்டிருப்பேன் என்று எனக்குத் தெரியாது. ஏனெனில் இது - அது என்னை பெலவீனப்படுத்துகிறது. ஆனால் இப்போது அது ஒரு காரியமில்லை. ஆனால் நம்முடைய பரலோகப் பிதா, எதை இந்த நிமிடத்தில் வெளிப்படுத்த முடியவில்லையோ, நண்பனே, அது மிகச் சரியான உண்மை , சரி. அந்த ஸ்திரீயைக் கொண்டு வாருங்கள். அவள்.. அவள் வரட்டும், சரி.

முதலாவது காரியம், உங்கள் முழு இருதயத்தோடு, தேவன் இங்கு